Regd No. M. 4900. 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 ஈரோடு 24-7-1948 சனிக்கிழமை மலர் 46.

## இறுதி மூச்சுள்ளமட்டும் எதிர்த்தே தீருவோம்.

★

"இவ்வுலகில் அடிபடுவதற்கென்றே பிறப்பிக்கப்பட்டவைகள் மூன்றாகும். அவை ஒன்று, பெண்கள்; இரண்டு, சூத்திரர்கள்; மூன்று, பறை (முரசு) இவையாகும். இப்படிப்பட்ட மிக மிக இழி தன்மையான வர்ணாச்சிரம தர்மத்தைக் கொண்ட ஒரு கதைக்காகவா இந்தியை இந்நாட்டில் நுழைக்கவேண்டும்?

பெண்கள் உரிமை வேட்கை கொண்டலையும் இத்தமிழ் நாட்டில், சூத்திரன் என்கிற வார்த்தையை ஏட்டில்கூட இருக்கவிடமாட்டோம் என்று எண்ணிறந்த வாலிபர்கள் துடியாகத் துடித்துக்கொண்டிருக்கும் இக்காலத்திலா, பெண்ணடிமையையும் சூத்திர இழிவையும் காக்கும் இந்தியை வீரத் தமிழ்நாட்டில் கட்டாய பாடமாக்க நினைப்பது? இது புத்திசாலித்தனமாகுமா? இதைவிட முட்டாள்தனமும் வேறுண்டா?

தமிழ்மொழிக்குள்ள பண்பில் லக்ஷத்தில் ஒரு பங்கு பண்புகூட இந்திமொழியில் இல்லை, இல்லை என்பதை அமைச்சரேகூட ஒப்புக் கொள்வார்.

தமிழ் மொழி மந்தியையும் மனிதனாக்கும் தன்மை பெற்றது. ஆனால் இந்தியோ மனிதனையும் மந்தியாக்கும் தன்மையுடையது.

ஆகவே கலையற்ற, பண்பற்ற, கலைஞர்களை ஈன்றெடுக்கும் ஆற்றல் அற்ற, மனிதர்களின் மனிதத்தன்மையை அகற்றி அவர்களை மந்திகள் ஆக்கவல்ல இவ் இந்திமொழி இந்நாட்டு மக்களுக்குத் தேவையற்றது. இதை நாம் எதிர்த்தே தீரவேண்டும்.

ஒரு காலத்தில் நாவலந் தீவு பூராவும், இன்றையப்பரத கண்டம் பூராவும் பரவியிருந்த தமிழகம் முதலில் விந்தியம் வரை குறுகி இன்று வேங்கடம் வரை குறுகி நிற்கிறது. இந்த நிலையில் இத்தமிழகத்தில் இந்தி நுழைந்து விடுமானாலோ தமிழகமே மறைந்து போகும், மாண்டு போகும்.

ஆகவே இதைக் கடைசி மூச்சுள்ளவரை ஒவ்வொரு தமிழனும் எதிர்த்தே தீரவேண்டும்.

தமிழ்ப் பெரியார் திரு. வி. க.

17—7—48ம் நாள் சென்னையில் நடந்த
இந்தி எதிர்ப்பு மாநாட்டுத் திறப்பாளர்.

பெண்கள் பகுதி:

# உங்கள் வேலை அடுப்பு ஊதுவதும், பிள்ளை பெறுவதும்தானா?

★

## லண்டனில் என்ன செய்கிறார்கள்? பாருங்கள்!

"சமூகத்தின் ஒவ்வொரு பிரிவினரும் நாட்டின் அதிக ஏற்றுமதி இயக்கத்திற்கு உதவி செய்து வருகின்றனர். இருந்த போதிலும் குடும்ப அலுவல்கள் காரணமாக—தொழிற்சாலைகளிலோ அல்லது காரியாலயங்களிலோவேலைசெய்ய முடியாமல்—அநேக ஸ்திரிகள் தங்களுடைய பங்கையும் நிறைவேற்றாவண்ணம் தடுக்கப்பட்டுள்ளனர். இந்தக்குடும்ப ஸ்திரிகளும், இதரர்களும் நாட்டின் அதிக ஏற்றுமதி இயக்கத்திற்கு உதவ முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்க விஷயமேயாகும். ஏனெனில் உலகின் இதரப்பகுதிகளிலில்லாத திறமையும் கற்பனா சக்தியும் இவர்களிடம்தான் இருக்கின்றன. ஆகவே அவர்கள் ஓழிந்த நேரங்களில் தங்களுடைய இல்லங்களிலேயே பலதரப்பட்ட குடிசைத்தொழில்களில் ஈடுபட ஊக்கமளிப்பதற்கான சகல பூர்வாங்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இந்த ஸ்திரிகள் தயாரிக்கும் பொருள்களை வெளிநாடுகளில் விற்பதின் மூலம் அதிக ஏற்றுமதி இயக்கத்திற்குப் பெரிதும் உதவ முடியும்" என இரண்டாம் உலக யுத்தத்தின் போது நாட்டிற்கு அரும்பெரும் பணி ஆற்றிய பெண் தொண்டர்களைக் கொண்ட பிரிட்டனின் மிகப்பெரிய ஸ்தாபனமும், யுத்த பிற்கால ஆண்டுகளிலும் தொடர்ந்து தொண்டாற்றி வருவதுமான, ஸ்திரி தொண்டர்கள் படையின் தலைவியான ரீடிங் சீமாட்டி அக்டோபர் மாதம் அறிவித்தார். அதற்குப் பின் பிரிட்டனில் ஸ்திரிகள் இயக்கமொன்று அங்குராப்பணம் செய்யப்பட்டது.

உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருள்களை தாங்கள் பார்த்ததாகவும், அவைகள் உலகத்தின் இதரப் பகுதிகளில் உள்ளவர்களுக்குப் பெரிதும் உபயோகப்படக்கூடுமென்றும், பிரிட்டனுக்கு விஜயம் செய்யும் வெளிநாட்டினர் கூறுகின்றனர். பிரிட்டிஷ் சரக்குகள் வாங்குவதற்காக வரும் வெளிநாட்டு வர்த்தகர்கள், பிரிட்டனின் இல்லத் தொழில் பொருள்களுக்கு நல்ல மார்க்கெட்டுகள் கிடைக்குமென அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இவைகளிலிருந்து பிரிட்டிஷ் ஸ்திரிகள் தங்களுடைய பழங்கால கைவேலைப்பாடுகளை மறந்து விடவில்லை யென்பது தெளிவாகியுள்ளது. அத்துடன் தங்களுடைய மூதாதையர்களைப் போல் அதே முறைகளில் மனதைக் கவரக்கூடிய வகையில் உற்பத்தி செய்யக் கூடிய திறமையும் இவர்களிடமிருக்கிறதென்பதையும் எடுத்துக் காட்டுகிறது.

குடும்ப ஸ்திரிகள் தங்களுடைய இல்லங்களில் தயாரிக்கக் கூடிய பொருள்களின் சில மாதிரிகளைச் சேகரித்து அனுப்பும்படி லண்டனிலுள்ள ஸ்திரி தொண்டர் படையின் தலைமைக் காரியாலயத்திலிருந்து பிரிட்டனிலுள்ள சகல கிளை ஸ்தாபனங்களுக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இவ்வேண்டுகோளின் பலன்கள் எதிர்பார்த்ததைவிட தரத்திலும் அளவிலும் மிகமிஞ்சி விட்டன. இவைகளுள் வர்ண வேலைப்பாடுகளுடன் கூடிய அழகான கம்பளங்களும் மிகமதிப்பு வாய்ந்த ரத்தின கம்பளங்களும், டர்ஹாம் வேல்ஸ் ஆகிய இடங்களில் தயாரிக்கப்பட்டதும் கவரக் கூடியதுமான மெத்தைகளும், 'ரவாப்'களும் கைகளினால் தைக்கப்பட்ட 'ஸ்போர்ட்ஸ் ஷர்ட்'டுகளும் அடங்கும். சுருங்கக் கூறின் அநேகமாக ஒவ்வொரு பொருளும் மற்றதைவிடமேன்மையான வேலைப்பாடு என்று கூறும்படி காணப்பட்டது.

ஸ்திரிகள் தொண்டர்படையின் வேண்டுகோளுக்கு அநேகமாக சகல ஸ்திரிகளும் செவிசாய்த்துள்ளனர். இந்த ஸ்தாபனத்தின் ஒரு அங்கத்தினரான மேரி அரசியார் ஒழிந்த நேரத்தில் தானே தயாரித்தும் மேரி. ஆர். (Mory-R.) என கையெழுத்திட்டதுமான ஆறுவித அழகான நாற்காலி ஆசனங்களுக்கான உறைகளை அனுப்பினார். இவைகளை வெளிநாடுகளில் விற்கும்படியும் அப்பணத்தை நாட்டிலுள்ள நர்ஸுகளின் கழகமொன்றுக்கு நன்கொடையாக வழங்கும்படியும் மேரி அரசியார் கேட்டுக்கொண்டார். இந்த ஆறு உறைகளும் அமெரிக்காவில் 10,000 டாலர்களுக்கு விற்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் கிடைத்த வெற்றியின் பலனாக "ஸ்திரிகளின் இல்லத்தொழில் லிமிடெட்" என்றஒரு கூட்டுறவுஸ்தாபனமும் அமைக்கப்பட்டது. ரீடிங் சீமாட்டியே இந்த ஸ்தாபனத்திற்குத் தலைவியாக நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்திரிகளின் இப்புது முயற்சிக்கு சகல வழிகளிலும் உதவுவதாக அரசாங்க வர்த்தக போர்டும் வாக்களித்துள்ளது. வர்த்தக போர்டின் மாஜி தலைவரும், தற்போது பொக்கிஷ மந்திரியுமான ஸர். ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் பிரஸ்தாப ஸ்தாபனத்திற்கு முழு ஆதரவு அளிப்பதாகக் கூறியுள்ளார். உயர்ந்த ரக—ஏற்றுமதிக்கு லாயக்கான--மூலப்பொருள்கள் ஒதுக்குவதின் மூலம் அரசாங்கம் இந்த ஸ்தாபனத்திற்குப் பெரிதும் உதவி செய்து வருகிறது.

"ஸ்திரிகளின் இல்லத்தொழில் லிமிடெட்" இதற்குள் ஒரு பிரபல ஸ்தாபனமாக அபிவிருத்தியடைந்துள்ளதுடன் பிரதிதினமும் புதிய விண்ணப்பங்களும் மாதிரிகளும் லண்டன் காரியாலயத்திற்கு வந்து கொண்டிருக்கின்றன. பிரிட்டனில் தற்போது 30000 ஸ்திரிகள் இல்லத்தொழில்களில் ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. இதுவரை அனுப்பப்பட்டுள்ள மொத்தம் 15000 மாதிரிகளுள் கால் பகுதி உடனடியாகப் பிரஸ்தாப ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவைகளுள் பலவித மெத்தைகளும் கம்பளங்களும் போர்வைகளும் ஜெர்ஸிகளும் கால் உறைகளும் குழந்தைகளுக்கான சட்டைகளும் அடங்கும். இவைகள் அனைத்தும் பிரஸ்தாப ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களிடமி

# காலம் வரவரக் கெட்டுப் போச்சா?

[★]

(சென்றவாரத் தொடர்ச்சி)

## பூமியின் வளர்ச்சி.

மிகவும் உஷ்ணம் பொருந்திய காற்றுக் கோளமாயிருந்த பூமி சிறிது சிறிதாகக் குளிர்ந்து, திரவ நிலைபெற்று, உருகிய உருண்டையாக மாறியது. பின்பு உருகிய உருண்டையின் மேற்புறம் குளிர்ந்து கெட்டியாகி, உள்ளே சூடேறியிருந்த திரவப் பொருளையும் மேலே இறுகிக் கெட்டியான ஓட்டையும் பெற்றது. முதலில் ஏற்பட்ட இந்த ஓடு மிகவும் கெட்டியான ஒரு வகைப் பாறையால் ஆனது. இப்போது உலகில் உள்ள பாறை அமைப்புகள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும், அஸ்திவாரமாகவும் இருப்பது இந்த 'ஆக்கினேய'க் கற்பாறைதான். பூமியின் மேல் ஓடு சுருங்கியபோது பரப்பானது சுருக்கு விழுந்து மேடு பள்ளங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில் சுற்றிலுமுள்ள வாயு மண்டலம் குளிர்ந்து, அதிலிருந்த நீராவி இறுகி வாயு ரூபத்திலிருந்து ஜல ரூபமாகி, பூமியின மேற்பரப்பின் சுருக்கத்தால் ஏற்பட்ட பள்ளங்களில் நிறைந்தது. ஆதியில் கடல்கள் இவ்வாறு ஏற்பட்டன.

உலகத்தின் குழந்தைப்பருவமாகிய இந்த ஆதி காலத்தில், ஆக்கினேயப் பாறையான நிலப்பரப்பும், ஆங்காங்கே சிற்சில கடல்களுமே உலகத்திற்காணப்பட்டன. ஆதிக்கடலின் அலைகள், ஆக்கினேயப் பாறைகளாலான நிலத்தை ஓயாது மோதி உடைத்து வந்தன. சூரியனுடைய உஷ்ணமும் பாறையைப் பொடித்து வந்தது. இவ்வாறு பொடிந்த கற்கள் அவ்வப்போது பெய்த மழைப் பிரவாகத்தினால் அடித்துக்கொண்டு போய்க் கடல்களில் சேர்க்கப்பட்டன. இவைகள் சேர்ந்து கனம் ஏற ஏற இறுகிக் கெட்டிப்பட்டு சகிண்டரி அல்லது ஜலப்பாறைகள் ஆயின. இந்த ஜலப்பாறைகளுக்குள் சிற்சில இடங்களில் பூமியின் உள்ளே இருக்கும் அதியுஷ்ணமான கற்பிரவாகக் குழம்பு பாய்ந்து, ஜலப்பாறைகளை உருமாறச் செய்தன. இவற்றிற்கு உரு மாறிய பாறைகள் என்று பெயர்.

## உலகத்தின் குடிவழிப்பட்டி.

வண்டல் படிந்து ஏற்படும் மணற்பாறை அல்லது ஜலப்பாறை என்கிற இரண்டாந்தரப் பாறைகளே, புராதன உலகத்தின் விஷயங்களைப் போட்டோ பிடித்துக் காட்டுவது போல் தெரிவிக்கிறது. ஜலப்பாறையின் அடுக்குகள் அவை ஏற்பட்ட காலத்தில் இருந்த கடல் வாழ் பிராணிகளின் கெட்டியான பாகங்களையும், அவற்றின் முத்திரைகளையும் அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன. இவற்றிற்கு பாசில்கள் என்று பெயர். மேற்சொன்ன பாறைகளின் வகைகளிலிருந்தும், அவற்றின் அமைப்பிலிருந்தும், அவற்றில் காணப்படும் பாசில் பொருள்களிலிருந்தும் அந்தப் பிரதேசத்தின் பூர்வீக விருத்தாந்தங்களை நேரில் காண்பது போல் கண்டறிந்து சொல்லுகிறார்கள் பூதத்துவ சாஸ்திர வல்லவர்கள்.

சூரிய வெப்பம், காற்று, மழை, ஆகிய இயற்கைத் தொழிலாளிகளின் இடைவிடாத உழைப்பின் பயனாக ஆதியில் நிலமாயிருந்த பாகங்கள் கடல்களாயின. கடல்கள், பெரும் நிலப்பரப்புகளாக மாறின. இவ்வாறு ஏற்படும் மாறுதல்கள், மிக மிக மெதுவாக நிகழ்பவை. உதாரணமாக நாம் வசிக்கும் இந்தப் பிரதேசமாகிய கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் எல்லாம் ஒரு காலத்தில் கடலுக்கடியில் இருந்திருக்கிறது என்று சொல்லும் போது, அது அநேக கோடி வருஷங்களுக்குமுன் என்பதையும் மறக்கக் கூடாது. அதன்பின் பலகோடி வருஷங்களுக்குப்பின் இந்தப்பிரதேசமும் தெற்கேயுள்ள இலங்கையும் அதைச் சுற்றி ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா கண்டங்கள் வரை எல்லாம் சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக இருந்த காலமும் உண்டு. அப்பால் அநேக கோடி வருஷங்களின் மாறுதல்களின் பயனாக இப்போதுள்ள அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. பூதத்துவ காலத்துடன் மனிதனின் ஜீவியகாலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றுமேயில்லையென்றுதான் சொல்லவேண்டும்.

பைய ஏற்படும் மாறுதல்களேயன்றி அவ்வப்போது திடீரென ஏற்படும் எரிமலைப் பொழிவுகளாலும், பூகம்ப அதிர்ச்சிகளாலும் ஏற்பட்ட மாறுதல்களும் அனேகம் உண்டு.

இவ்வாறாகக் கண்டங்களும் கடல்களும், தத்தம் போக்கில் பரிணமித்து வருவதை ஆராய்ந்து வருகிறது விஞ்ஞானத்தின் ஓர் கலையாகிய பூதத்துவ சாஸ்திரம். தாவர ஜங்கமப் பொருள்கள் தோன்றியழிவது (மாறுவது) போல, நீர் நிலப்பிரிவுகளும் தோன்றி மறைவது இயற்கையாகும்.

## உலகில் உயிர்த்தோற்றம்.

கற்பாறையும் கடலுமாக விருந்த உலகத்தில் அநேக கோடி ஜீவராசிகள் பரிணமித்துக் காட்சியளிக்கின்ற அதியற்புதமான வரலாற்றை விளக்குகின்றது, விஞ்ஞானத்தின் வேறோர் கலையான 'பயாலஜி' என்ற ஜீவதத்துவ சாஸ்திரம்.

ஜலவாயு, பிராணவாயு, உப்புவாயு, கரிவாயு ஆகிய நான்கு பொருள்களின் மிக நுட்பமான ஓர் வகைச் சேர்க்கையிலிருந்து, உயிர் தோன்றுவதற்குத் தகுதியுள்ள ஜீவகப் பொருளாகிய புரோட்டோ பிளாஸ்ம் என்னும் ஜடப் பொருளிலிருந்து தாவரங்கள் பரிணமித்த வரலாற்றையும், அதிலிருந்து முதுகெலும்பில்லாதன, ஊர்வன, பறப்பன, பாலூட்டி வளர்ப்பன ஆகிய ஜீவ ஜந்துக்கள் பரிணமித்து வளர்ந்த வரலாற்றையும், அப்பால் மனிதன்தோன்றிய வரலாற்றையும் விளக்கிக் கூறும் பயாலஜி என்னும் ஜீவதத்துவசாஸ்திர ஆராய்ச்சிக்குத் துணையாகத் தாவர சாஸ்திரம், பிராணி சாஸ்திரம், இரசாயனம் முதலிய மற்ற கலைகளும் ஆராயப்படுகின்றன.

## மனிதயுகம்.

உலகில் மனிதன் தோன்றி சுமார் மூன்றுகோடி வருஷங்கள் தான் இருக்கலாம். ஆனால் உலகம் தோன்றி சற்றேறக்குறைய (300 முந்நூறு) கோடி வருஷங்கள் ஆவதாகப் பூதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

(தொடர்ச்சி 15-ம் பக்கம்)

ருந்து நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்கப்பட்டு வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு விற்கப்படுகின்றன.

இவ்வழியின் மூலமாவது பிரிட்டனின் பொருளாதார மீட்சிக்கு உதவ வேண்டுமென்ற ஆர்வம் சகல பிரிவுகளையும் சேர்ந்த ஸ்திரிகளுக்கு ஏற்பட்டு வருகிறது. அத்துடன் தங்களுடைய கைத்திறமையை உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டுமென்ற விருப்பமும் அவர்களுடைய மனதில் எழுந்துள்ளது.

பிரிட்டிஷ் ஸ்திரிகளால் இல்லங்களில் தயாரிக்கப்படும் பொருள்களைக் கொண்ட ஒரு கண் காட்சி தற்போது ரீடிங் சீமாட்டியின் தலைமையின் கீழ் அமெரிக்காவில் சுற்றுப் பிரயாணம் செய்து கொண்டிருக்கிறது. இக்காட்சி நியூயார்க், வாஷிங்டன், லின்விலாடி, சிகாகோ முதலிய நகரங்களுக்கும் விஜயம் செய்யும். இக்காட்சியில் மேரி அரசியார் தயாரித்து அனுப்பிய நாற்காலி உறைகளும் இடம் பெற்றுள்ளன.

ரோஜா முத்தையா

# ★ புரட்சி இலக்கியம். ★

சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த இலக்கிய காலத்தைப்பற்றியும், அக்காலத்தில் வாழ்ந்த மக்களைப்பற்றியும் நினைக்கும்பொழுது எனக்கு ஒரு ஏக்கமுண்டாகும் நாம் அந்த இலக்கியகாலத்தில் வாழவில்லையேயென்று. கண்ணகியும்—கோவலனும் வாழ்ந்த நாட்டிலேதான் வாழ்கிறோம். அகநானூறும், புறநானூறும் தோன்றிய நாட்டிலேதான் தோனறியுள்ளோம். மணிமேகலை, சீவகசிந்தாமணி போன்ற ஒப்பற்ற காவியங்கள் உள்ள நாட்டிலேதான் வாழ்கிறோம். ஆனால் அந்த இலக்கிய வரலாறு நிகழ்ந்த காலமாகிய கண்ணகியும், மணிமேகலையும் வாழ்ந்த நாட்களிலோ அல்லது சிவகசிந்தாமணி அகநானூறு போன்ற ஒப்பற்ற இலக்கிய காவியங்களை எழுதிய ஆசிரியர்கள் வாழ்ந்த நாட்களிலோ வாழவில்லையே என்ற எண்ணம்தான் எனக்குப் பல பல ஆண்டுகளாக இருந்து வந்தது. அந்தக் கவலை சில ஆண்டுகளாகக் கொஞ்சம் கொஞ்சமாக நீங்கி வருகிறது. உண்மையை உணரும் பொழுது நான் ஓர் ஒப்பற்ற "புரட்சி இலக்கிய" காலத்தில்தான வாழுகிறேன் என்று கருதுகிறேன்.

கலைப்பூங்காவின் காவலர்கள்என்று கூறிக்கொண்டு, கற்பைக் காசுக்கு விலைகூறும் விலைமாதர் போல, கதை, கவிதை, கட்டுரை முதலியவை எழுதி விலை கூறி விற்று வயிறுவளர்க்கும இன்றைய இலக்கிய எழுத்தாளர்களும். தமிழ் இலக்கிய கர்த்தாக்கள் என்று கூறிக்கொண்டு காசுவருகின்ற போக்கில் பேனாவை ஓட்டுகின்ற தமிழ் மறுமலர்ச்சி எழுத்தாளர்களும் தமிழுக்காகவே உழைப்பதாகவும்—வாழ்வதாகவும் கூறிக்கொண்டிருந்தனர்— இன்னமும் கூறிக்கொண்டிருக்கின்றனர். இவர்களுடைய எழுத்துக்கள் இலக்கியம் எனறு சொல்லுவதற்குக் கொஞ்சம் கூட யோக்கியதையற்றது என்பது நமக்கு நன்கு தெரியும். தமிழை இந்தி தாக்கிய பொழுது அடுப்பங்கரையில் ஓடி மறைந்து கொண்ட இந்த தமிழனபர்களை தமிழ் இலக்கிய காவலர்கள் என்று யாரும் ஒப்புக்கொள்ளவும் மாட்டார்கள். இவர்களுடையஎழுத்துக்களை இலக்கியமென்று ஒப்புக்கொள்ளாத நான் ஒரு இலக்கிய காலத்தில்தான் வாழுகிறோம் என்று கூறுகிறேனே அது எப்படியென்று கேட்க உங்கட்குத் தோன்றும். மீண்டும் தொடர்ந்து படியுங்கள்.

சுயமரியாதைக்காரனுக்குக் கலையைப்பற்றி ஒன்றுமே தெரியாது, இலக்கியமே அவர்களுக்கு இன்னதெனப் புரியாது எனக் கூறிக்கொண்டு பழமைக்கும், வர்ணாச்சிரமத்திற்கும் கலையென்ற பொன்முலாம் பூசி மக்கள் மன்றத்தில் புகுத்தி மக்களை மடையர்களாக்கி அதைத் தங்கள் வாழ்விற்குப் பயன்படுத்திக்கொண்டிருப்போர்களின் சூழ்ச்சிகளை மக்களுக்கு எடுத்துக் காட்டி வருவதோடு, அறிவுத் துறையில் மக்களைத் திருப்பி ஆற்றலுள்ளவர்களாகமாற்றியமைக்கும் வழியில் கலையை மாற்றியமைத்துக் கொண்டு வருகிறோம் நாம். இதைக் கண்ட சுயநலக் கூட்டத்தினர் கலை பிரச்சாரமாக மாறிவிட்டதென்று கூப்பாடுபோடுகிறார்கள், தங்கள் வயிற்றுப் பிழைப்புப் போய்விட்டதே என்ற காரணத்தினால். ஆனால் மக்கள் உண்மைக்கலை எப்படியிருக்க வேண்டுமென்பதை ஓரளவு இன்று உணரத் தொடங்கி விட்டார்கள். இனிமேல் இதுபோன்ற கலைப் பித்தலாட்டங்களுக்கு நாட்டில் இடமிருக்காதென்று நம்புகிறேன். இந்தக் கட்டுரையில் தமிழ் எழுத்தாளர்களைத் தாக்கி எழுத வேண்டுமென்ற நோக்கத்துடன் மேற்கண்டவைகளை நான் எழுதவில்லை. இன்றையத் தமிழ் எழுத்தாளர்களும், அவர்களுடைய தமிழ் இலக்கியமும் எப்படிப்பட்டதென்பதற்கே மேற்கண்டவைகளை எழுதியிருக்கிறேன்.

கண்ணகியும் கோவலனும் வாழ்ந்த வாழ்க்கை வரலாறு நமக்குச் சிலப்பதிகாரம் என்ற காவியமாகவிருக்கிறது. மணிமேகலை என்பவளின் தூய்மையான வாழ்க்கை வரலாறு நமக்கு ஒரு ஒப்பற்ற காவியம். தமிழர்களின் வீர வாழ்க்கையை எடுத்துக்காட்டக் கூடிய கலிங்கத்துப்பரணி முதலிய நூல்களும், தமிழர்களின் வீரம், உயர் பண்பு, நல்லொழுக்கம் முதலியவைகளை எடுத்துக் காட்டும் ஒப்பற்ற காவியங்களை இலக்கியங்களாகப் பெற்றிருக்கிறோம். உண்மையில் நாட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகளும், வரலாறுகளும் தான் இலக்கியமாக இருக்க முடியுமேதவிர, நடக்காததும்—நடக்கமுடியாததுமான காதல் கதைகளை அழகான நடையில் நாசுக்கான பாஷையில் தீட்டிவிட்டால் அதை எப்படி இலக்கியமென்று ஒப்புக் கொள்ள முடியும்?

இதுதான் இலக்கியம் என்று ஒரு புத்தகத்தை எடுத்து இவர்கள் (இன்றையத் தமிழ் எழுத்தாளர்கள்) காட்டுவார்களானால் அது அச்சுக்கலையின் பெருமைக்கு எடுத்துக்காட்டாகவிருக்கும். முகப்புப் படம் அழகாக அமைக்கப்பட்டிருக்கும், புத்தகம் கொஞ்சம் மொத்தமாகவும், அதற்கேற்ப பத்து, எட்டென்று விலை அமைந்திருக்கும். உள்ளே திருப்பினால் அத்தனையும் அம்மாமித்தமிழ்தான். இந்தப்புத்தகங்கள் மாடமாளிகைகளின் கண்ணாடிப் பீரோக்களை அழகு செய்து கொண்டிருக்க முடியுமே தவிர ஏழையிடம் இருக்க முடியாது. என்போன்றவர்கள் பணம் கொடுத்து வாங்கிப்படிக்கவோ, படித்தாலும் புரிந்து கொள்ளவோ முடியாது-புரிந்துகொண்டாலும் பயனிருக்காது. "இலக்கியம் மக்களுக்குப் பயனிக்கவேண்டுமானால் கோடீஸ்வரர்களின் மாளிகையை விட்டுக் குப்பை மேட்டிற்கு வந்தால் தான் முடியும்" என்று கருதுகிற நான் இவர்களுடைய புத்தகங்களை இலக்கியம் என்று ஒப்புக்கொள்ளவும் மாட்டேன்.

* *

நாம் வாழ்கின்ற காலமே ஓர் "புரட்சி இலக்கிய" காலம். 1938-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு—மொழிப் புரட்சியின் வரலாறு திராவிடன் மதிப்புக்குரிய காவியம். அக்கால நிகழ்ச்சிகளின் தொகுப்பு தமிழனின் ஒப்பற்ற இலக்கியம். தமிழ்மொழிக்குத் தீங்குவரின் தகர்த்தெறியத் தயங்கமாட்டோமெனத் தாய்மார்கள் சூள் உரைத்த அந்தக் காட்சியும், தித்திக்கும் தீந்தமிழ்க்குத் தீங்கென்ற செய்தி கேட்டவுடன் திகைக்காமல் இந்தியை ஒழிக்க போராடி சிறை சென்ற இளம் வீரர்களின் தீரச்செயல்களும், தமிழரின் வாழ்வும், கலையும் பறிக்கப்படுவதை எதிர்த்தேதீருவோம், தயங்கமாட்டோம் என முரசு கொட்டித் தமிழ் நாடெங்கும் படை திரட்டிப் பவனி வந்த காட்சியும், திராவிடத்தின் தனிப்பெரும் தலைவர் பெரியாரும் ஏனைய பலரும் சிறையிலே தள்ளப்பட்ட அந்தக் கால நிகழ்ச்சிகளும், ஆயிரத்திற்கு மேற்பட்ட இளைஞர்களும், தாய்மார்களும், குழந்தைகளும் தாய்மொழிக்காகச் சிறை சென்றதும், இந்தியின் பலிபீடத்தில் தாளமுத்து' நடராஜனைக் காவு கொடுத்துத் தமிழைக் காப்பாற்றியதும், அதிகாரப் போதையில் மூழ்கிக்கிடந்த ஆச்சாரியாரின் ஆட்சிக் காலத்தில் தமிழுக்கு இந்தியைத் தலைவணங்கும்படி செய்ததுமாகிய அந்த நிகழ்ச்சிகள் அத்தனையும் தொகுத்தெடுப்பின் அந்த நூல் நமக்குப் "புரட்சி இலக்கியம்" தான். இதை யாரும் மறுக்க முடியாது,

இந்த ஒப்பற்ற புரட்சி இலக்கியத்தைத் தாய்மொழிப் பற்று என்ற ஏட்டில் உழைப்பு—தியாகம் என்ற எழுதுகோலைக் கொண்டு ஆயிரக்கணக்கான வீரர்களின் பச்சை இரத்தத்தில் தோய்த்து எழுதி முடித்தோம். முதல் அத்தியாயம் தாளமுத்து—நடராசனின் கல்லறையில்

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

கதை கற்பனை.

சிறுகதை

முதற்பருவம்.

# பள்ளியறையில் முதல் நாள்!

போட்டி

எண் 7.

"பேசாமே, படுத்துத் தூங்குங்கோ! என்னைத் தொந்திரவு செய்யாதீங்க. உடம்புக்கு சரியில்லை" என்ற பதிலை எதிர்பார்க்கவேயில்லை கோபாலன். அவன் நினைத்துக் கொண்டிருந்ததெல்லாம் பகற்கனவாயிற்று. மணப்பெண்ணை முதல் நாள் படுக்கையறையில் சந்திக்கும் மணமகன் எதிர்பார்க்கும் பதிலா? இது. எனவே, கோபாலன் திடுக்கிட்டுப்போய்விட்டான். என்றாலும் ஒருவாறு மனதைத் தேற்றிக் கொண்டு ஒருசமயம் உடம்புக்கு சரியில்லை என்பது வாஸ்தவந்தான் போலும் என்று நம்பி கோபாலன் மறுபேச்சில்லாமல் படுத்துக் கொண்டான்; ஆனால் தூக்கம் எப்படி வரும்? கல்யாண அலுப்பினால் இரண்டு மூன்று நாள் தூக்கங்கெட்டிருந்ததன் காரணமாய்ச் சற்று தூங்கிவிட்டான். ஆனாலும், நிம்மதியில்லை அல்லவா? திடுக்கென்று விழித்துக் கொண்டான். கமலாவை அருகில் காணோம்!

அவனால் நம்பவே முடியாத காட்சியைக்கண்டான்! ஆம்; கமலா ஒரு ஸ்டூலின் பேரில் நின்று கொண்டு; விட்டத்தில் கயிறு கட்டிக் கொண்டிருப்பதைக் கண்டான்! சரேலென்று எழுந்து கமலாவைப் பிடித்துக் கொண்டு "என்னடி, கமலம்! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்? காரணம் என்ன?" என்று கேட்டான்; இல்லை—கதறினான். கமலமும் அழுதாள்.

கோபாலன் ஒரே பிடிவாதமாகக் காரணம் கேட்டதால், கமலம் "நான் விபசாரியாவதைவிட......" என்று சொல்லி அதற்குமேல் ஒன்றும் சொல்ல முடியாமல் தேம்பித் தேம்பி அழுதாள்.

"அழுக வேண்டாம்! உன் குறையைச்சொல்! கட்டாயம் நான் தீர்த்துவைக்கிறேன்! என்னிடமும் சொல்லித்தீராத நிலைமையிலல்லவா? நீ இந்தக் காரியம் செய்ய முற்பட்டிருக்க வேண்டும். அழுகாதே! மனதைத் தேற்றிக் கொள்! வந்து உட்கார்! உனது உள்ளத்தில் இருப்பதை ஒளியாமல் சொல்!" என்றெல்லாம் பல்பல கூறித்தேற்றி உட்கார வைத்து, அவள் என்ன கூறப் போகிறாள் என்பதை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்தான் கோபாலன்.

சரி, உள்ளதைக் கூறுவோமே. என்ன தான் சொல்லுகிறார், பார்ப்போமே என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு கமலம் கோபாலனை நோக்கி "தாலி கட்டியவரே! 'உங்கள் வாக்குறுதிப்படி நடப்பீர்களென்று நம்புகிறேன். உள்ளதைக் கூறுகிறேன்; கேளுங்கள். இன்னது தான் காரணம் என்று எனக்குச் சொல்லத் தெரியாது. எனது தகப்பனார் வீட்டுக்குக் கிழபுறமுள்ள ராமசாமித் தேவன் மகன் குருசாமித் தேவன் என்பவர் ஒருவர் இருக்கிறார். அவர் ஒன்றும் பெரிய படிப்பாளியும் அல்ல; பணம் படைத்த குடும்பத்தைச் சேர்ந்தவரும் அல்ல; அழகிற் சிறந்தவர் என்றும் சொல்வதற்கில்லை. என்ற போதிலும் எப்படியோ அவருக்கும், எனக்கும் நட்பு ஏற்பட்டு விட்டது! பல நாள் திருடன் ஒரு நாள் பிடிபட்டுத்தானே தீர முடியும்? சென்ற வாரம்தான் எங்கள் சங்கதி எனது தகப்பனாருக்குத் தெரிந்து விட்டது. உடனே அவர் ஒரே ஆர்ப்பாட்டம் செய்தார். என்னைக்குத்திக் கொன்று விடுவதாகக் கூறினார். குருசாமித் தேவரின் தலையைச் சீவிவிடுவதாகச் சீறினார். பிறகு எப்படியோ சில "பெரிய மனிதர்கள்" ஆலோசனைப்படி திடீரென்று நேற்று முன்தினம் எனது கல்யாணத்தை முடித்துவிட்டார்? நீங்கள் யார்? எப்பேர்ப்பட்டவர்? உங்களை எப்பொழுது கல்யாண விஷயமாகக் கலந்து பேசினார்கள்? நீங்கள் எப்படி ஒப்புக்கொண்டீர்கள்? இதெல்லாம் ஒன்றுமே எனக்குப் புரியவில்லை. நான் என்னமோ படிக்காதவள்தான். ஆனாலும் எனது கற்பைக் கெடுத்துக் கொள்ள மனம் சம்மதிக்கவில்லை. நான் உண்மையில் குருசாமிக்கு வாழ்க்கைப்பட்டு விட்டேன்; ஆனால் கள்ளத்தனமாக. இப்பொழுதோ நீங்கள் தாலி கட்டிய பாத்தியத்தில் உங்களுக்கு வாழ்க்கைப் படவேண்டியிருக்கிறது. இந்த மாதிரி விபசாரம் செய்வதை விட சாவதே மேல் என்ற முடிவிற்கு வந்தேன். தடுத்துவிட்டீர்கள். உள்ளதைக் கூறச் சொன்னீர்கள். கூறிவிட்டேன்" என்று சொல்லி முடித்துக் கோபாலன் முகத்தைப் பார்த்தாள்.

அவள் எதிர்பார்த்த மாதிரி கோபாலன் முகத்தில் கோபம் இல்லை! ஒரே துக்கம் குடிகொண்டிருந்தது. இருந்திருந்தாற்போல் கோபாலன் எழுந்து சட்டையை மாட்டிக்கொண்டான். "கமலம்! இரு, இதோ வந்துவிடுகிறேன்" என்று கூறிவிட்டு உடனே வெளியேறினான்.

* *

மறு நாள் இரவு மணி பத்திருக்கும். கோபாலன் கதவைத்தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தாள் கமலம். ஒரே ஆச்சரியம்! ஆமாம்; உண்மைதான்! கோபாலன் குருசாமியை உடன் அழைத்து வந்திருந்தான்.

* *

கோபாலன் தலைமையிலேயே குருசாமி—கமலம் திருமணம் நடைபெற்றது! கோபாலனைச் சமூகம் தூற்றியது; ஆனால் கோபாலன் அதைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. தன் புத்திக்குச் சரியென்று பட்டதைத் தைரியமாகச் செய்து முடித்தோம் என்ற திருப்தி கோபாலனுக்கு.

---

**தோழர்களே!**

❁

இதற்கு முன் 6 கதைகளையும் படித்தீர்களா?

இதையும் படியுங்கள்!

இன்னும் 6 கதைகள் பிரசுரிக்கப்படும்.

அதையும் படியுங்கள்!

பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

# எழுச்சிக்கதிர்கள்! எதிர்ப்பின்காரணங்கள்!

## இந்தி எதிர்ப்பு மாநாட்டில் இனத்தலைவர்களின் முழக்கம்!

மாகாண ஆட்சியைக் கவிழ்ப்ப தென்றால் ரெட்டியாரையும், பக்த வத்சலத்தையும், அவினாசி லிங்கனாரையும் ஆகிய இவர்களைத் தான் நாம் கவிழ்க்க வேண்டும். இவர்களைக் கவிழ்ப்பதால் நமக்குத் தான் புண்யமென்ன? இவர்கள் இல்லாவிட்டால் ஒரு அய்யரோ ஒரு அய்யங்காரோ தான் இவர்களுக்குப்பதிலாக மந்திரியாக இருப்பார்.

பேரியார்.

நமது நாட்டிலுள்ள மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் நடந்துகொள்ளும் மாதிரியைப் பார்த்தால், எல்லாம் அழிவு வேலையின் அறிகுறியாகவே நமக்குக் காணப்படுகிறது. ஆக்க வேலையல்ல, அழிவு வேலைதான். மாகாண சர்க்காரில் மட்டுமல்ல, மத்திய சர்க்காரிலும் நடைபெற்று வருகிறது என்று அழுத்தம் திருத்தமாகக் கூறமுடியும்.

திரு. வி. க.

தமிழ் நாட்டில் தமிழ் வளர்ச்சிக்க:க மொழி சம்பந்தமாக 2-வது முறையாகப் போர் தொடுக்க, அதற்கான படைதிரட்ட, அப்படையைத் திறம்பட நடத்திச் செல்வதற்கான வழி வகுக்க இன்று இங்கு கூடியுள்ளோம்.

நாரண—துரை.

இன்றுள்ள நிலையோ வலது கை இடது கையை அடிப்பதாகத்தான் இருக்கிறது. இருந்தபோதிலும் இங்கு கூடியுள்ள தாய்மார்களையும் சிறுவர் சிறுமியர்களையும் பார்க்கும் போது, மந்திரிகளுக்கு அவர்களுடைய பதவியைப் பாதுகாத்துக்கொடுப்பதை விட, இவர்களின் தன்மானத்தைப் பாதுகாத்துத் தருவது தான் நமது முக்கிய கடமை.

பேரியார்.

சர்க்கார் என்ன செய்கிறது? சட்டங்கள் செய்கிறது. எத்தகைய சட்டங்கள்? பாதுகாப்புச் சட்டம். அதைப்பாதுகாக்க மற்றோர் அடக்கு முறைச்சட்டம். மேலும் அடக்கு முறைக்கு ஆளானவர்களை விசாரணையின்றிச் சிறையில் பூட்டிக் காவலில் வைப்பதற்காக வேறோர் சட்டம். இன்னோரன்ன சட்டங்கள் தான் இன்றைய சுயராஜ்ஜிய சர்க்கார் அன்றாடம் பிறப்பித்து வரும் சட்டங்களாகும்.

திரு வி. க.

நாம் ஒரு மகத்தான காரியத்தில் ஈடுபட முனைந்து நிற்கிறோம். அக்காரியத்தில் வெற்றி பெற நமக்கு ஒற்றுமையும் கட்டுப்பாடும் பொறுமையும் அவசியம்வேண்டும்.

நாரண—துரை.

ஒரு சீனியர் வக்கில் தன்னிடம் வேலை கற்றுப்பழகிய ஒரு ஜூனியர் வக்கிலுக்கு நீதிபதி உத்தியோகம் கிடைத்தால், அதை எவ்வளவு பெருமையாகக்கொள்வாரோ அவ்வளவு பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறேனே நான், ரெட்டியார் பிரதம மந்திரியாக இருப்பது குறித்து.

பேரியார்.

இந்தி அல்லது சமஸ்கிருதம் அல்லது உருது அல்லது அல்லது என்று இன்னும் போய்க்கொண்டே இருக்கிறது. இதை நீங்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும். இந்த அல்லது, அல்லது என்பதெல்லாம் நம்மை ஏமாற்றும் தந்திரமாகும். முதல் அல்லது ஆபத்தின் குறி. இரண்டாவது அல்லது ஏமாற்றத்தின் அறிகுறி. மூன்றாவது அல்லது படுமோசத்தின் அறிகுறி.

திரு. வி. க.

போராட்டத்திற்குத் தயாராகப் போர் முரசு கொட்டவே இந்த மூன்று கிழவர்களும் (அடிகள், திரு. விக. பெரியார்) இங்கு அமர்ந்திருக்கிறார்கள்.

ம. பொ. சி.

அன்று அவருடைய பதவிக்குப் போராட்டம் வந்த காலத்து முடிவறியும் ஆவலுடன் தூக்கமின்றி எவ்வளவு நேரம் கண்விழித்துக் கொண்டிருந்தேன், தெரியுமா, நான்? ஆகவே அவரை ஒழிக்கப் பார்க்கிறேன் என்று என்மீது அவரால் கூட கண்டிப்பாக குற்றம் சாட்ட முடியாது.

பேரியார்.

எந்த ஒரு நாட்டு மக்களின் சிறப்புக்கும் அடிப்படைத் தத்துவமாயிருப்பது அந்நாட்டினரின் தாய்மொழி. அத் தாய் மொழி அம் மக்களின் ரத்தத்திலுள்ள உயிர்ப்பினும் மேம்பட்டது. ஆதலின் உடலினும் உயிரினும் அதிகம் போற்றிக் காப்பாற்றப்பட வேண்டியது. அத்தகைய தாய் மொழிக்கு தீங்கு செய்யத்தான் ஆட்சியாளர்கள் அழிவு வேலை செய்கிறார்கள்.

திரு. வி. க.

நமது தாய் மொழிக்கு நமது வீட்டிலுள்ள செல்வாக்கையும் அழித்து, அந்த இடத்தில் இந்தியைக் கொண்டு வந்து அமர்த்தத் தான் அவனாசியார் வடநாட்டாருக்கு அடிமையாகிச் சூழ்ச்சி செய்கிறார் என்று தான் கருத வேண்டியிருக்கிறது.

ம. பொ. சி.

அடுத்தபடியாக கல்வி மந்திரி யாரை எடுத்துக்கொண்டாலோ, அவர் என் ஜில்லாக்காரர். எங்கள் குடும்பத்துக்கும், அவருடைய குடும்பத்துக்கும் நெருங்கிய சம்பந்தமும், மொய்முறை வழங்கலும் உண்டு. மேலும் அவர் என்னுடைய நம்பிக்கைக்கு வேறானவரும் அல்ல. இன்னும் கூறப்போனால், தன்னுடைய சட்டசபைப் பதவியைக்கூட ஒரு சமயம் எனக்காக விட்டுக் கொடுக்கவேண்டி ராஜாஜியை அழைத்துக்கொண்டு என் வீடுதேடி வந்தவர்தான் அவர். அதுவும் நான் காங்கரசை விட்டு வெளியேறி, எதிர்க் கட்சியில் இருந்தபோது இது நடந்ததாக்கும். இப்படியிருக்க அவர் ஒழிய வேண்டுமென்றா நான் நினைப்பேன்?

பேரியார்.

பதவிப் பித்து இல்லாவிட்டால், அந்த அடிமைப் புத்தி இல்லாவிட்டால், இந்தி தமிழைக் கெடுக்கும் என்று அறிந்திருந்தும் அதை தமிழ்நாட்டில் நுழையவிட்டிருப்பாரா? தன் புத்தியைத்தான் அடிக்கடி மாற்றிக்கொண்டிருப்பாரா?

பேரியார்.

ஜூன் இறுதியில் இந்தியை இஷ்டபாடம் என்று கூறிய அமைச்சர், ஜூலை மாதத்துவக்

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கத்தில் கட்டாய பாடமாக்கினார் என்றால் 'ஜமைலைமாதக் குளிர் காற்று என்ன அவரது புத்தியைப் பேதித்து விட்டதா?

திரு. வி. க.

தமிழன் தூங்கிக்கொண்டிருந்த போதே கூட, வந்த மொழியால் சொந்த மொழியை அழிக்க முடியாமற் போய்விட்டதென்றால், தமிழன் விழித்துக்கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் வரும் இந்த இந்தி மொழியால் யாது செய்ய இயலும்?

ம. பொ. சி.

முன் ஹிந்தி நம் மாகாணத்தில் நுழைக்கப்பட்டபோது ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்தவர்கள் வெள்ளையர்கள். அவர்கள் ஒரு நாகரீக பரம்பரையைச் சேர்ந்தவர்கள். மனிதத்தன்மையை அறிந்தவர்கள். மேலும் உலக வாக்குக்குப் பயந்தவர்கள்.

பெரியார்.

இன்று ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருப்பவர்களோ நாகரீகம் தெரியாதவர்கள் மட்டுமல்ல, தாமே நாகரீகத்தின் பிரதிபிம்பங்கள் என்றுகூட தம்பட்டம் அடித்துக் கொள்பவர்கள். காடுகளில் ஆடுமாடுகளைக் கொன்று தின்று வாழ்ந்துவந்த ஆரிய காட்டுமிராண்டி பரம்பரையைச் சேர்ந்தவர்கள் இன்று நம்மை ஆட்சிபுரிபவர்கள். தன்மானமற்றவர்கள். தந்திரத்தால் கட்டுப்பாடான பலாத்காரத்தால் ஆட்சியைக் கைப்பற்றியவர்கள்.

பெரியார்.

தமிழில் பண்பட்ட தமிழன் நாக்கு இந்தியை ஏற்கவே ஏற்காது, எவ்வளவுதான் திணிக்கப் பட்டாலும் கூட. கல்வி அமைச்சர் கூட இதை நன்குணர்வார், தமிழன் நாக்கு இந்தியை ஏற்காது என்று.

ம. பொ. சி.

ஒரு அமைச்சர் ஒரு உத்தரவு பிறப்பிக்கின்றார் என்றால் அது குறைந்தது மூன்று ஆண்டுகளேனும் நாட்டில் செல்லும்படியாக இருக்கவேண்டும். வரும் பொருளுரைத்தல் மந்திரிக் கழகு என்பது போல் அதுதான் அமைச்சு முறைக்கு அழகு. அமைச்சு முறை தெரிந்தால் தானே நம் கல்வி அமைச்சருக்கு. அதனால் அவர் ஒரு வாரத்துக்கு ஒருமுறை தமது உத்திரவை மாற்றிக்கொண்டு இருக்கிறார். என்னே ஒழுங்கு முறை.

திரு. வி. க.

# இந்தி எதிர்ப்பு மாநாடு.

## உலக வரலாறு காணாத ஒப்பற்ற 2-வது மொழிப்போர் பிரகடனம்.

சென்னை ஜூலை 17.

தமிழ்க் கடல் மறை மலை அடிகள் தலைமை தாங்க, தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் திறப்பு விழாச்செய்ய, தமிழ் எழுத்தாளர் தலைவர் நாரண துரைக்கண்ணன் அவர்கள் வரவேற்க, தமிழர் தலைவர் திராவிடத் தந்தை பெரியார் அவர்கள் மனமுவந்து மாநாட்டில் கலந்துகொள்ள, மதம், கட்சி வேறுபாடின்றி ஜனாப் அப்துல் மஜீத் (முஸ்லிம்) ரெவரண்ட் அருள் தங்கையா (கிறிஸ்துவர்) வி. பி. எஸ். மணியன் (பௌத்தம்) சிவஞானக் கிராமணியார் (காங்கரஸ்) முதலியோர் பங்கு கொள்ள, விருதுநகர் வி. வி. ராமசாமி, சி. என். அண்ணாத்துரை, டி. சண்முகம் பிள்ளை, பாவலர் எஸ். எஸ். அப்துல் காதர், இந்திராணி பாலசுப்பிரமணியம், பி. பாலசுப்பிரமணியம், ராமாமிர்தம் அம்மையார், ஜீவரத்தினம், புரட்சிக் கவிஞர், டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி முதலான தோழர்கள் ஒத்துழைக்க, மாகாணத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்து சேர்ந்த பாராட்டையும், வாழ்த்தையும் பெற்று, இருபதினாயிரம் தமிழ்த் திராவிடர்கள், சென்னை சர்க்கார் மீது உலக வரலாறு காணாத ஒப்பற்ற 2-வது மொழிப் போராட்டத்தைப் பிரகடனஞ்செய்து போரமைப்பிற்கான வழிவகையும் செய்தார்கள்.

## போர்ப் பிரகடனமும் போரமைப்பும்.

17—7—48-ந் தேதி சென்னை செயின்ட்மேரி மண்டபத்தில் சென்னை மாகாண தமிழர்கள் கூடிய இந்தத் தமிழ்ப் பொதுமக்கள் மாநாடானது,

இந்திய சர்க்கார் தமிழ் நாட்டில் பள்ளி மாணவர்களுக்கு இந்தியைக் கட்டாய மொழிப் பாடமாக ஆக்கி உத்தரவிட்டிருப்பதை இம்மாநாடு வன்மையாய் கண்டிப்பதுடன், ஜனநாயக சர்க்கார் என்று சொல்லிக்கொண்டு பொது மக்கள் இஷ்டத்துக்கு விரோதமாக அன்னிய மொழியைக் கட்டாயமாகப் புகுத்துவது சிறிதும் ஜனநாயகமாகாதென்றும், இந்த சர்க்கார் இந்நாட்டு மக்களின் நம்பிக்கைக்கு ஏற்ற சர்க்கார் அல்லவென்றும் இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இந்தியைத் தமிழ்நாட்டில் எந்த வகையிலும் புகுத்துவதையும், கட்டாய பாடமாக்குவதையும் தமிழர்கள் விரும்பவில்லை என்பதையும், கடைசிவரை இந்தியை எதிர்த்துப் போராடியாக வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது என்பதையும் இம்மாநாடு சர்க்காருக்கு வலியுறுத்திக் காட்டுவதோடு தமிழர்களின் இக்கருத்தைச் சர்க்கார் அறியும்படி தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகி விட்டது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இந்த அவசியத்தை நடவடிக்கையில் கொண்டுவரத் தக்க திட்டமிடவும் அதைச் செயலில் நடத்தவும் உரிமைகொடுத்து அடியிற்கண்ட 13-பேர்களுக்குக் குறையாத வர்க்கிங் கமிட்டியை—செயற் குழுவினர்களாக இருந்து பணி ஆற்றும்படி இம்மகாநாடு நியமிக்கிறது.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி
சி. என். அண்ணாத்துரை
ம. பொ. சிவஞானக் கிராமணியார்
நாரண துரைக்கண்ணன்
கி. ஆ. பெ. விசுவநாதம்
டி. சண்முகம் பிள்ளை
ஈ. வெ. ராமசாமி
சி. டி. டி. அரசு
மணி மொழியார்
வி. பி. எஸ். மணியர்
ராமாமிர்தத்தம்மாள்

கமிட்டிக்கு கோ-ஆப்ட் செய்துகொள்ள உரிமை உண்டு.

மேலும் இத்தீர்மானங்களை நாட்டில் மற்ற மக்களுக்குப் பிரசாரம் செய்யவும் பிரசாரகர்களை நியமிக்கவும், தொண்டர்களைச் சேர்க்கவும், நிதி திரட்டவும் இக்கமிட்டிக்கு இம்மாநாடு அதிகாரமளிக்கிறது.

குடி அரசு

24—7—48 சனிக்கிழமை.

## பயமா காரணம்? அல்ல! அல்ல!!

இந்தியை எதிர்ப்பவர்கள் யார்? ஒரு சிறு வட்டாரத்தினர் என்கிறார் கவுண்டரய்யர் சுப்பராயன். வகுப்புத்துவேஷ, வர்க்கத்துவேஷக் கனல்களைக் கிளப்பி வெற்றியடைய நினைத்து ஏமாற்றமடைந்த அரசியல் விரோதி என்கிறார் நவீன கடற்கொள்ளை வியாபார வேந்தர் வேதரத்தினம். கருப்புச் சட்டைக்காரர்களான சூனாமானாக்காரர்கள் என்று பழைய பிளேட்டைத் தூக்குகிறார்கள் ராகவப் பெருமாள் வகையறாக்களான அவதார சொரூபங்கள். இந்தி எதிர்ப்பு இயக்கம் வகுப்புவாதப் போர்வையில் நடைபெறுவது தெரியுமா? என்று நெருப்பு வைக்கிறார் பழைய பேர்வழியான பணக்காரக் காலித்திமிர் உடைய மதுரைச் சுப்பராம அய்யர். அதற்கு ஆமாம் போட்டு பெருமாள் மாட்டோடு போட்டி போடுகிறார் அன்பர் அவினாசியார்.

இந்த எதிர்ப்பு முனைகள்தான் சென்ற வாரம் சென்னையில் நடந்த இந்தி எதிர்ப்பு மாநாட்டிற்குப்பின் திறக்கப்பட்டிருப்பவைகளாகும்.

ஆமாம் போடுகிற ஆசாமி அவினாசியவர்கள் சட்டசபையில் பதில் கூறியிருக்கிற ரீதியைப்பார்த்தால் எப்பேர்ப்பட்ட பேடியும்கூட பின்வாங்கியேயாகவேண்டும்என்று நம்மால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை.

தமிழ் நாட்டிற்கு இந்தி வேண்டுமா? வேண்டாமா? இந்த வாதப் பிரதி வாதங்களில் இறங்க வேண்டிய அவசியம் நம்மைப் பொறுத்தவரை இல்லை. ஏன்? வேண்டுமென்பதற்கு எவராலும் விவேகமான பதில் கொடுக்கப்பட்டதில்லை, கொடுக்கப்படுவதில்லை. இன்று நேற்றல்ல, இந்திப் பிரச்சனை எப்போது வந்ததோ அப்போதிருந்தே. அதாவது 25, 30 வருஷங்களுக்கு முன்னாலிருந்தே. காரணம் "உங்களை நான் காட்டிக் கொடுக்கப்போகிறேன்" என்கிற உண்மையை எந்தக் கடைகெட்டவன்தான் வாய்விட்டுக்கூற முடியும்?

எதிர்ப்பு முகாம்களிலிருந்து வீசப்படுவது எல்லாம், எதிர்ப்பாளர்கள் "ஒரு சிறு கும்பல்" "வகுப்புவாதிகள்" "சூ. ம. காரர்கள்" "அரசியல் விரோதிகள்" என்கிற குண்டுகளாகும். இந்தக் குண்டுகள் எதிர்ப்பாளர்களை அழித்துவிடப் போதுமானவைகள் என்று அவர்கள் எண்ணியிருக்கக் கூட மாட்டார்கள். ஆனால் வீசுகிறார்கள், உண்மை என்ன? பொது மக்கள் கண்களை முடிந்தமட்டும் மறைக்கட்டும் என்று வீசப்படும் புளுகினித் தன்மை நிறைந்த புகைக் குண்டுகளாகவாவது இருக்கட்டுமே என்கிற எண்ணம் போலும்.

தமிழ்க்கடல் மறைமலையடிகளையும், தமிழ்ப்பெரியார் திரு. வி. க. அவர்களையும், தமிழ் பேராசிரியர் நாவலர் பாரதியார் அவர்களையும் சூ. ம. காரர்கள் என்றோ, அரசியல் விரோதிகள் என்றோ மான ஈனமுள்ள எவரும் கூற முடியுமா? எழுத்தாளர் தலைவர் நாரண—துரைக்கண்ணன் அவர்களும், ம. பொ. சிவஞானம் அவர்களும், மாஜிமேயர் ராதாகிருஷ்ணன் அவர்களும் அரசியல் விரோதிகள் என்றோ, சூ. ம. காரர்கள் என்றோ, வகுப்புவாதிகள் என்றோ அழைக்கப்படக்கூடிய பட்டியலில் அடங்கியவர்கள் என்று இதுவரை எந்த இழிமகனும் சொல்லக்கேட்டதில்லையே! என்று எந்தத் தமிழ் மகன்தான் இதைக்கேட்டு சிரிப்படையாமல் இருக்க முடியும்?

சூ. ம. காரர்கள் என்றால் என்ன? சூ. ம. காரர்கள் எங்கேயிருந்து இங்கு குடிவந்தவர்கள். சூ. ம. காரர்கள் தான் வகுப்புகளே கூடாது என்று கூறுகிறார்களே! காங்கரஸ்காரர்கள் கூறுவது போல அரசாங்கத்திலே எந்தக் கழுதை வேண்டுமானாலும் இருந்து விட்டுப் போகட்டும், எங்களுக்கு அதைப் பற்றிக் கவலையில்லை என்றுதான் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்களே! எங்கள் கவலையெல்லாம் இந்த நாட்டு மக்களுடைய இழிவு துடைக்கப்படவேண்டியதுதான், அதை யார் செய்தாலும் சரி என்று கூறிவிட்டார்களே! அப்படியிருக்க அவர்களை வகுப்புவாதிகள் என்றோ, அரசியல் விரோதிகள் என்றோ கூறுவதாயிருந்தால், அதை நாங்கள் நம்பவேண்டுமென்றால் அடே பித்தலாட்டப் பிண்டங்களே! எங்களையென்ன அவிவேகிகள் என்றா கருதிவிட்டீர்கள் என்று கேட்கும்படியாய்ப் பொது மக்களில் யார்தான் இன்று உண்மை நிலையைப் புரியாதவர்கள்?

எதிர்ப்பாளர்களை ஒழித்துக் கட்ட என்ன நடவடிக்கை என்று கேட்கிறார் சட்டசபையில் வேதரத்தினம். (என்ன இனப்பற்று? அடே கோடரியே!) எதிர்ப்பவர்களை வகுப்புவாதிகள் என்கிற பட்டியலில்தானே சேர்க்கப் போகிறீர்கள் என்கிறார் சுப்பராமன். (நல்ல சுலபமான முறை என்கிற எண்ணம் போலும்) பத்தாயிரம் பேர் எதிர்த்தால் தான் என்ன? பத்துலட்சம் தொண்டர்களுக்கு நாங்கள் வாய்க்கரிசி போட்டு வளர்த்து வருகிறோமே தெரியுமா? என்று சவால் விடுகிறார் மற்றொருபுறம் வேதரத்தினம்.

இவைகளிலிருந்து வகுப்புவாதிகள் என்கிற பெயரால், சட்டத்தின் துணையினால், இந்தியை எதிர்ப்பவர்கள் ஒருபுறம் ஒழிக்கப்பட வேண்டும்; கைக்கூலிகளைக் கொண்டு எதிர்த்துக்; கலகம் விளைவித்து வம்பை வளர்த்து, சூ. ம. காலிகளுக்குப் பொதுமக்கள் எதிர்ப்பு என்று மற்றொருபுறம் பேர்பண்ண வேண்டும். இதுதான் காங்கரசின் பெயரால் வயிறு வளர்க்கும் வடநாட்டு அடிமைகளின் மூளையில் உற்பத்தியாயிருக்கும் இப்போதைய திட்டம் என்று கூறிவிடலாம். இதற்கிடையே, எதிர்ப்பாளர்களுக்குள் சதுர் உபாயங்களைக் கையாண்டு பார்க்கலாம் என்கிற மற்றொரு திட்டமும் போடப்பட்டிருக்கலாம். அதன் எதிரொலிதான் "இந்தி எதிர்ப்பு இயக்கத் தலைவர்களைச் சந்திக்கப் போகிறீர்களா?" என்று தோழர் சுவாமிநாதன் கேள்வி கேட்டிருப்பதும்,

# பெரியார் உருவப்படம் நாம் பீடுபெறத் திறப்போம்!

## திருவண்ணாமலையும் திருப்பத்தூரும் முந்துகின்றன!

★

திருவண்ணாமலை ஜூலை 15-

திருவண்ணாமலை நகரசபைக் கட்டிடத்தில் பெரியார் ஈ. வெ. ரா. படத்தைத் திறந்து வைக்கும்படி வேண்டிய திராவிடர் கழகச் செயலாளர் கொடுத்த வேண்டுகோளின்மீது இன்றைய நகரசபைக் கூட்டத்தில் அவ்விதமே செய்திட ஒரே மனதாகத் தீர்மானம் நிறைவேறியது. கூட்டத்திற்கு நகரசபைத் தலைவர் தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் தலைமை தாங்கினார்.

திருப்பத்தூர் (வ. ஆ.) ஜூலை 15-

திருப்பத்தூர் நகரசபையின் நேற்றைய சாதாரணக் கூட்டத்தில், நகரசபை மண்டபத்தில் பெரியார் ஈ. வெ. ரா. படத்தை தோழர் சி. என். அண்ணாதுரையைக் கொண்டு திறந்து வைக்கலாமாக ஒரு தீர்மானம் நிறைவேறி 7 கமிட்டி மெம்பர்கள் நியமிக்கப்பட்டனர். இக்கூட்டத்திற்கு நகரசபைத் தலைவர் தோழர் சி. எம். சுப்பிரமணியம் அவர்கள் தலைமை தாங்கினார்.

---

கல்வி அமைச்சர் "இதைப்பற்றி நான் யோசிக்கிறேன்" என்று பதில் கூறியிருப்பதும்.

இந்த மாதிரியான எந்தத் திட்டமும் உருப்படியாகப் போவதில்லை என்பதை நாம் இப்பொழுதே அவினாசியாருக்கு அறிவித்து விடுகிறோம். இச்சகம் பேசியோ, இழிவுரை கூறியோ, இச்சை காட்டியோ, மயக்குவதற்கு மறத்தமிழன் எவனும் மசியமாட்டான் என்று நாம் வற்புறுத்திக் கூறுகிறோம். வகுப்புவாதிகள் என்கிற பெயரால் ஒழித்துவிடலாம் என்று மனப்பால் குடியாதீர்! சட்டம் துணை நிற்கும் தண்டிக்க, என்கிற தருக்கை விட்டொழியும்! கைக்கூலிகளின் காலித்தனத்தால் காரியமினிதே நிறைவேறும் என்கிற கற்பனைக்கு இடங்கொடாதீர்! என்றும், இந்த வேளையிலும் எடுத்துக் கூறுகிறோம்.

இந்தி எதிர்ப்புப் போராட்டமென்பது வெறும் மொழிப்போராட்டமல்ல. கலைப்போராட்டம். கலாச்சாரப் போராட்டம். மானாபிமானப் போராட்டம், உரிமை வேட்கைப் போராட்டம் என்பதை, மானத்தை அடகு வைத்தவன் தவிர மற்றெல்லோரும் உணர்ந்திருக்கிற நேரம் இது. பெரியாரவர்கள் கூறியிருப்பதைப் போல பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக நடந்துவரும் ஆரியர்—திராவிடர் போராட்டம் இன்று முடிவான கட்டத்திற்கு வந்துவிட்டது. மானத்தைப் பணயம் வைத்து ஒவ்வொருவனும் போராட்டத்தில் குதிக்க வேண்டும் என்று துடிதுடித்துக் கொண்டிருக்கிற நேரம் இது. ஆகவேதான் கூறுகிறோம் இந்த ஆகாத திட்டங்களையெல்லாம் கை விடுங்கள் என்று ஆளவந்தார்களுக்கு.

இப்போதையப் பிரச்னை இந்தி கட்டாயமா? 2வது மொழி கட்டாயமா? என்பதல்ல. இரண்டாவது மொழியில் இந்தி இடம் பெறக்கூடாது! அது கட்டாய பாடமானாலும் சரி, இஷ்ட பாடமானாலும் சரி கூடவே கூடாது! இந்தி இந்த நாட்டின் தேசிய பாடை என்று தமிழ் நாட்டையும் சேர்த்துச் சொல்லுகிற பேச்சு, நடவடிக்கை இருக்கிறதே அவற்றை ஒழித்துக் கட்டவேண்டும் என்பதுதான். இந்த அடிப்படையின் மீதுதான் இந்த சர்க்கார் நாட்டுமக்களின் நம்பிக்கைக்கு ஏற்ற சர்க்கார் அல்ல என்கிற தீர்மானம் மாநாட்டில் ஒரேமனதாக நிறைவேறியிருக்கிறது. சிறுபிள்ளைத்தனமான சீர்கெட்ட போக்கை விட்டொழித்து அமைச்சர் அவினாசியார் இதை ஆழ்ந்து சிந்திக்கட்டும்!

முழு விபரங்களையும் தெரியாமல் இந்தி எதிர்ப்பு இயக்கம் நடந்து வருகிறது என்கிற பதிலால் முட்டாள் பட்டத்திற்கு உரியவர்கள் இந்தி எதிர்ப்பாளர்களா? அல்லது ஆட்டுவித்தபடி ஆடும் அமைச்சர் கனங்களா என்பதைத் தயவு செய்து அவினாசியாரவர்கள் எண்ணிப் பார்ப்பாராக!

தலைமை ஆசிரியர்கள் கூட்டத்தில், 2-வது மொழிகட்டாயம் என்றுகூறி, அவற்றுள் பிரதேச மொழியல்லாத மற்ற மொழிகளை அல்லது அல்லது என்கிற அடுக்கு வரிசையில் எந்தவாய் கூறியதோ அந்தவாயே, இப்பொழுது சட்டசபையில் அல்லது அல்லது என்கிற இடுக்கில் தமிழும் நுழைந்து கொண்டிருப்பதாகக் கூறுகிறது என்று சு. ம. கூறுகிறது. இரண்டாவது பாஷை என்றால் இரண்டாவது பாஷைதான், அதில் தமிழ் எப்படி இடம் பெறும்? என்று தலைமை ஆசிரியர் கூட்டத்தில் கூறியதை வற்புறுத்தினார் மந்திரி என்கிறது தினமணி. மந்திரியார் சட்டசபையில் புரிந்துகொள்ள முடியாதபடி உளறிக் கொட்டினாரா? அல்லது தேசிய பத்திரிகைகளின் திருகுதாள மகாத்மியங்களுள் இது என்றா என்பது எப்படியோ போகட்டும்.

இந்தியைத் தமிழ் நாட்டில் எந்த வகையிலும் புகுத்துவதையும், கட்டாய பாடமாக்குவதையும் தமிழர்கள் விரும்பவில்லை என்பதை மாநாடு தெளிவு படுத்தியிருக்கிறது. குறைந்தது 4-வது பாரம் வரையிலாவது இந்தி இஷ்டபாடமாகவோ கட்டாய பாடமாகவோ எந்த வகையிலும் புகுத்தப்படக்கூடாது என்று இந்தி எதிர்ப்புக் காரியக்கமிட்டிக் கூட்டம் அதை வரையறுத்து வற்புறுத்தியிருக்கிறது.

இதற்கு அவினாசியார் இணங்குவாரா? டெல்லிக்குத் தூக்கிய காவடியில் எப்படிப்பட்ட பிரசாதம் கிடைத்ததோ? பிரதமர் எந்தப் பிரசாதம் பெற்று வந்தாரோ? போகப் போகத் தெரியும்.

இந்த முடிவைக் கேட்டு, போராட்டத்திற்கு ஒரு எல்லைக்கோடு கட்டியிருக்கும் பொறுப்பை யுணர்ந்து, திராவிடர்கள் அடைந்திருக்கும் பெருமகிழ்ச்சியை நாம் காரியக் கமிட்டியாருக்குத் தெரி

வித்துக் கொள்ளுகிறோம்.

இந்தியைக் கட்டாயபாடமாக்கக்கூடாது என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்வதாகச் சேலம் முனிசிபாலிட்டியில் ஒருதீர்மானம் வரப்போவதாக அறிகிறோம். இத்தீர்மானத்தைக் கேட்டு நாம் சந்தோஷப்படுகிறோமென்றாலும் இந்தத் தீர்மானம் இந்தியை இஷ்டப்பாடமாகவும், கட்டாயப்பாடமாகவும் ஆக்கக்கூடாது என்றிருக்குமேயானால், அது உண்மையிலேயே அர்த்தம் நிரம்பியதாகவும் பயனுள்ளதாகவும் இருக்குமென்று சொல்ல ஆசைப்படுகிறோம். இதைப்போலவே ஒவ்வொரு தன்மானம் உள்ள நகரங்களிலும் நகரசபை ஒவ்வொன்றும் இந்த மாதிரியான தீர்மானத்தைச் செய்து அவினாசியாருக்கனுப்ப முயற்சி எடுக்கின்றன என்றும் அறிகிறோம். ஆனால் இவைகளால் எவ்வளவு பயன் ஏற்பட்டுவிடும் என்று நம்மால் எண்ணவும் முடியவில்லை.

இப்போதையப் போராட்டத்தின் லட்சியம் தலைவர் பெரியாரவர்களால் நன்கு விளக்கப்பட்டிருக்கிறது. திராவிடனும், திராவிடனுமே முட்டி மோதிக்கொள்ளும்படியான போக்கை ஆரியம் வளர்த்து விட்டது. இதனால் கஷ்ட நஷ்டப்படுகிறவர்கள், ரத்தம் சிந்துகிறவர்கள், சாகிறவர்கள் எப்படியும் திராவிடர்களாகத்தான் இருக்கமுடியும். இதுதான் உண்மையான நிலையென்றாலும் அதாவது வலது கை இடது கையையும் இடது கை வலது கையையும் அடிப்பதாகத்தான் இருக்கிறது என்றாலும், இந்தப் போராட்டம் நடந்தேயாக வேண்டும் என்றுதான் பார்ப்பனீய ஆதிக்கம் விரும்பிவிட்டது.

ஆம்! நாமும் கூறுகிறோம். இது எப்படியும் நடந்துதான் ஆகவேண்டும்! அடிமையாய் வாழ்வதைக் காட்டிலும், தமிழ்நாடும் மலையாள நாடாக மாறுவதைக் காட்டிலும் தமிழ் மக்கள் அழிந்தொழிந்து போவது நல்லது.

காலிகளைக் கொண்டும் குண்டர்களைக்கொண்டும் கூட்டங்களைக் கலைத்து, தொண்டர்களை அடித்து சு. ம. காலிகள் என்று தூற்றச்செய்து விடலாம் என்கிற திட்டத்தை மட்டும் கைவிட்டு விடுங்கள் என்று மட்டும், காலிக்கூட்டத்திற்குத் தலைவன் என்று பேசுகிற கனவான்களை நாம் கேட்டுக் கொள்ளுகிறோம். பார்ப்பனர்களே! இப்படி ஒருபோர் முனையை அமைக்காதீர்கள், அமைக்க இடங்கொடாதீர்கள் என்று பார்ப்பனத் தோழர்களை முக்கியமாகக் கேட்டுக் கொள்ளுகிறோம். ஏன்? பயமா காரணம்? அல்ல! அல்ல! பார்ப்பனர்களின் புத்திக்கே விட்டு விடுகிறோம்.

# செய்தியும்—சிந்தனையும்.

★

● நேருஜி விஜயம் செய்து விட்டுப் போனபின்—அதற்குள் இனாம் பிரச்னையும் இறுதியாகத் தீர்ந்து விடும்—ஜமீன்தாரி மசோதா எடுத்துக் கொள்ளப்படுமெனத் தெரிகிறது.

செய்தி.

முந்திய நேருவிஜயத்தில் கோவை ஆலை முதலைகள் நடந்து கொண்டது போல், இப்போதைய நேருவிஜயத்தில் இனாம்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கப்படுகிறதா? என்ன?

o o

● மாணவர்களுக்கு ஜீவனம் தேடுவதற்கான தொழில்களையும் மாணவிகளுக்குக் குடும்பத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்கான தொழில்களும் கற்பிக்க புதிய கல்வி முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

தலைமை ஆசிரியைகளிடையே அவினாசி.

குடும்பத்தைச் சிறந்த முறையில் நடத்துவதற்குப் பயிற்சிகொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறேன் என்று அவினாசி கூறியதைக் கேட்டு, "குடும்பமே இல்லாத இந்த மனுஷனா" என்று ஆச்சரியத்தோடு சிரிப்பொலி உண்டாகி இருக்குமல்லவா?

o o

● இந்தியக் கலாச்சாரத்திலிருந்து மாறுபட்ட தமிழ்க் கலாச்சாரம் என்று ஒன்று இப்பதாகச் சொன்னாலும் சரி. இது உண்மையல்ல.

சென்னையில் கிருபலானி.

இந்தியாவில் தமிழ் நாடு என்று ஒன்று இருப்பதாகச் சொன்னாலும் சரி, இது உண்மையல்ல! என்கிற ரீதியில் பேசும் ஒருபைத்தியத்தைக்கண்டு, கற்களை வாரி வீசாமல் சென்னை இருந்ததே, இதுவே ஒரு தமிழ்க் கலாச்சாரம் என்பதை அந்த......எப்படி உணர்ந்து கொள்ளும்?

o o

● நகர சென்னை வாக்காளர் ஜாபிதாவில் தங்கள் பெயர்களை பதிவு செய்து கொள்ள அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களைப் பொதுமக்கள் பூரணமாகப் பயன் படுத்திக் கொள்ளவில்லை என்பதைச் சர்க்கார் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

சென்னை சர்க்கார் அறிக்கை.

ஓட்டு உரிமையிருந்து அதைப் பயன்படுத்தியதால் தானே "காவடி தூக்கும் சர்க்கார் நமக்கு வாய்த்தது" என்கிற பீதி இதற்குக் காரணமாக இருக்குமா?

o o

● பிரதேசப் பாஷைப் படிப்புடன் கூட சமஸ்கிருத படிப்பையும் சேர்ப்பதால் என்ன கெடுதி ஏற்படுமென்று தெரியவில்லை.

அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்.

பச்சைப் பசும்பாலோடு பாம்பின் நஞ்சையும் சேர்த்து அருந்துவதால் என்ன கெடுதி ஏற்படுமென்று கேட்டிருந்தால் இதைக் காட்டிலும் நன்றாயிருக்கும்.

o o

● ஜெயில் மந்திரி மாதவமேனன் புதுக்கோட்டை சிறையில் கொடுக்கப்படும் உணவை ருசி பார்த்து விட்டு, "இம்மாதிரி தினமும் கொடுக்கப்பட்டால் நல்லது, மற்ற இடங்களைவிட உணவு இங்கு நன்றாயிருக்கின்றது" என்றார்.

செய்தி.

அன்று தயாரிக்கப்பட்ட உணவு அவருக்காகவா? கைதிகளுக்காகவா?

o o

● பள்ளிக்கூடங்களில் இந்தியை ஒரு பாடமாகவைப்பதை சில வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் எதிர்க்கின்றனர். இந்த எதிர்ப்புக்கும்பலில் சில காங்கரஸ்காரர்களும் சேருவது கண்டு நான் வேதனையடைகிறேன்.

டாக்டர் சுப்பராயன்.

கவுண்டரய்யர் கண்ணுக்கு எதிர்ப்பவர்கள் சில வட்டாரங்களைச் சேர்ந்தவர்கள் என்று படலாம்! ஆனால் ஒரு சந்தேகம். அதை அவரையே கேட்டு விடலாம். ஓய்! அரைப் பாப்பாரே! இந்த வேதனை உமக்கு எப்போது உண்டாகிறது? அம்மாமி வர்க்கத்தாரைக் காணும் போதா? ஆச்சாரி புருஷாளைத் துதித்து அயல் நாட்டுக்குத் தாவலாம் என்றுஎண்ணும் போதா?

o o

● இந்தியாவின் பாஷையான இந்தியில் பேசுவதை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் ஆகஸ்டு 8-ம் தேதியில் சென்னை வி. பி. ஹாலில் "மீவாரின் வீழ்ச்சி" என்கிற ஹிந்தி நாடகத்தை

இந்தி மாணவர்களால் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

செய்தி.

சரியான ஏற்பாடு! இதைப் பார்க்கும் புத்தியுள்ள எவனுக்கும் அது மீவாரின் வீழ்ச்சியாக மட்டும்இருக்காது; தமிழரின் வீழ்ச்சியாகவும் இருக்குமல்லவா?

o o

● தனது குட்டியை இழந்து விட்டதன் காரணமாக ஆமதாமாத் குரங்கு ஒன்று உண்ணாவிரதமிருந்து உயிர் விட்டது. இக்குரங்கு 7 நாள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்திருக்கிறது.

செய்தி.

இனியாவது பட்டினி கிடந்து காரியத்தைச் சாதித்துக் கொள்ளலாம் என்கிற குரங்கு மனப்பான்மையை விட்டு விடுவார்கள் என்று இந்த நாட்டில் எதிர்பார்க்க முடியுமா?

o o

● சர்க்கார் உத்தியோகங்களில் நியமிக்கப் படுவதற்கு பெண் என்ற ஒரே காரணத்திற்காக பெண்களுக்கும்-ஆண்களுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இனி நீடிக்கமுடியாதென்று முடிவு செய்திருக்கின்றனர்.

மத்திய சர்க்கார் அறிக்கை.

100-க்கு 99 பேர்படித்திராத சூத்திரச்சிகள் உள்ள நாட்டில், இந்த அறிக்கையைச் சர்க்கார் பிரசுரிக்கிறதென்றால் இதற்குப் பெயர் பித்தலாட்டம் என்பதைத் தவிர வேறு என்ன? பார்ப்பனத்திகளுக்கும் உத்தியோகங்கள் வழங்கப்படும் என்று சுருக்கமாக இதைக்கூறி விடலாமே!

திருடமுயன்ற ஆசாமி
பிடில் வித்துவானால் பிடிபட்டார்.

ஒரு செய்தி தலைப்பு.

பிடில் வித்துவான் இசை நரம்புகளை மீட்டிக் கைத் திறமையைக் காட்டினாரா? இசை நரம்புகளை அறுத்துக் கைத்திறமையைக் காட்டினாரா?

o o

● மந்திரிசபையில் தமிழ் தெரிந்த ஒரு ஹரிஜன் நபரை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, அவருக்கு இந்துமத பரிபாலன இலாகா கொடுக்கவேண்டுமென்றும் நந்தனார் மட அதிபர் சகஜானந்தம் தலைமையில் நடந்த மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

செய்தி.

தனக்கே ஒரு மந்திரி பதவி வேண்டும் என்றும், தன்னிடம் இந்துமத பரிபாலன இலாகாவை ஒப்படைக்க வேண்டும் என்றும் மட அதிபர் வெளிப்படையாகக் கேட்டிருக்கலாம். அப்படியே பதவியும் கிடைத்து இலாகாவும் கிடைக்குமானாலும், சகஜானந்தம், சண்டாளனாயிருப்பதிலிருந்து எத்தனை இஞ்ச் முன்னேறிவிட முடியும்?

# என்ன செய்யப்போகிறீர்கள்?

★

ஏ, தமிழே, இன்பத்தமிழே, தமிழின் சுவையே, சுவைத்திடும் இதழே, இதழின் உரிமைப்பொருளே, மனிதனே, மாத்தமிழனே, செத்துப்போ! சாகாப்புலவன் ஆக்கிய வேகாக்குறளே, வெந்துபோ! நெருப்பில்விழு! இமயம் சென்று தமிழ்க்கொடி நாட்டி, கனகவிசயனின் தலையிலே கல் ஏற்றி, கண்ணகிக்குச் சிலை செய்த சேரனே—செங்குட்டுவனே, இனி இந்த நாட்டின் பக்கம் உன் பெயரே வரக்கூடாது! வந்தால் உனக்கு மரண தண்டனை, கொன்று விடுவோம் நாங்கள். ஆழமுள்ள அகழி வெட்டிப் புதைப்போம். இனிவராதே!

ஏ, தென்றலே, இளந்தென்றலே, தென்றலின் குளுமையே, குளுமையை உணர்வாக்கும் பூஞ்சோலையே, சோலையின் உரிமைக்காரனே, செந்தமிழனே, சூடு, சொரணையற்றவனே, செத்துப்போ! விடுதலை வேட்கையிலே, வெற்றிகாண, குறிக்கோள் பாதையில் கோணாது செல்பவனே வாழாதே, மாண்டுபோ! களம் சென்று, குருதிசிந்தித் திரும்பும், கணவனுக்கு இன்சொல்லால் 'காயம்' நீக்கி, வீறு கற்றுக்கொடுத்த மாதரசியே, ஒழிந்துபோ! முல்லைச் செடியே, மல்லிகை மலரே, மலர்க்கொடியே, மலராதே, மணந்தராதே! கருகிக்காய்ந்துபோ! வாடிவதங்கிப்போ வேரோடு வீழ்ந்துவிடு!

ஏ, நாடகக்காரா, புரட்சிமணம் பரிமளிக்கும் நாடகத்தை நடத்தாதே! சாதி, மதபேதம் காணத்தயங்காதே! தீண்டாமையை வளரசெய்! ஏ, தமிழா, உன்னைத்தான், நீ அறிவாளியாயிராதே! பஞ்சத்தால் சஞ்சலப்படு! பட்டினியால் உன்வாழ்வை வாழாவெட்டியாக்கிக்கொள்! சாவு!

ஏ, காவியமே! இலக்கியச் சுவை சொட்டும் தமிழ் ஓவியமே! நீ ஏன் தோன்றினாய்? தமிழனுக்குப் பெருமை தரவா? ஆரியத்தை அலட்சியம் செய்யவா? தமிழ் நாகரீகத்தை விளக்கிக் காட்டவா? இராவணனை உயர்த்தவா? அப்படியானால் தமிழ் நாட்டில் இராதே தரைமட்டமாக்கி விடுவோம் உன்னை! யார் அது? 'தமிழ் வாழ்க' என்று கூறுபவன் யார்? இதோ உன் கழுத்திலே ஈட்டி! அது என்ன? தாளமுத்து-நடராஜன் நினைவுக் கட்டடமா? ஏ, நினைவுச் சின்னமே! 'ஹிரோஷிமா'வைப்பார்! ஒரே அணுக்குண்டு! அதுபோல் நீயும் ஆகிவிடு விரைவில்! தயங்காதே! தரைமட்டமாகிப்போ!

ஏ, கிழவா! உனக்கும் தமிழுக்கும் என்ன சம்பந்தம்? ஏ, தாடி! உன்னைத்தான்! காது கேட்கவில்லையோ? எவ்வளவு திமிர் உனக்கு? எழுபது வயதுக்கிழமே! ஏன் நாட்டைச் சீர்திருத்தினாய்? ஏன் பகுத்தறிவை யூட்டினாய்? நாலரைக்கோடி மக்களுக்கு ஏன் நல்வாழ்வளிக்கத் திட்டம் தீட்டினாய்? தமிழ் மலர, அந்த மணத்திலே, மணத்துடன் வாழவா பார்க்கிறாய்? தமிழ் ஒழிந்துவிடும். நீயும் ஒழிந்து விடுவாய்! எழுபது வயதிலும் உனக்கு எதிர்ப்பு நோக்கமா? காந்தியைக் கொன்றவன் பார்ப்பான் என்று ஏன் உண்மையைக் கூறினாய்? உன்னைச் சித்திரவதை செய்கிறேன் பார்! யாரது? இவர் அறிஞரோ? ஏன் அறிஞனாய் 'வாழ்க்கை வாழ்வதற்கே' என்று ஏன் கூறினாய்! அய்யா தந்த அறிவுரைக்கு வலக்கரமே, உன்னை ஒழித்தே தீருவேன்.

யார்நீ? பாரதியாரின் பெயரைப் பரப்பியவனே, ஏ, கவிஞனே, நீகாதல் கவிதை எழுதுவதை விட்டு ஏன் புரட்சிக்கவிதைகளை எழுதினாய்? உனக்கும் தண்டனை. அதுயார்? பச்சோந்திப்பாரதியா? ஏ, சோமசுந்தரம்! இனி நீ 'தமிழ்' என்றே பேசாதே! நீ தமிழனல்ல, இந்தியன். அது என்ன கூட்டம்? இந்தி எதிர்ப்புப் பட்டாளமா? யாரங்கே? கிட்டு, வாவிரைவில்! வீசு அவர்கள்மேல், நம்பாணங்களை! வர்ஷையாகவீசு! ஒவ்வொன்றாகவீசு! ஓயாதுவீசு! வாரி, வாரி வீசு! அணுக்குண்டுபோடு! அழியட்டும் தமிழ்! தமிழர்கள்! அவள் யாரடா வேம்பு! அழகாயிருக்கிறாள். தமிழ்த்தாயா? பெல்லாரி, வேலூரைக் காலி செய்து தயாராக வைத்திரு.

அவன் யார்? ஆறே முக்காலும்

---

● நீங்கள் (தமிழ்ப் புலவர்கள்) வயிற்றுப் பிழைப்புக்காக தமிழைக் கற்றீர்கள். நான் தமிழுக்காகவே தமிழைக் கற்றேன். தமிழ் இறந்தால் நானும் இறப்பேன்.

முத்தியாலுபேட்டையில் அவிநாசி.

எந்த மொழிப் புலவர்கள்தான் வயிற்றுப் பிழைப்புக்காக அல்லாமல் அந்தந்த மொழியைக் கற்றார்கள் என்று கூறிவிடமுடியும் மதி மந்திரியே! கல்வி இலாகா மந்திரியாகா விட்டால் கடலில் விழுந்திறப்பேன் என்று ரெட்டியாரைப் பயமுறுத்தினீர் முன்பு! இப்போதென்னடா என்றால் தமிழிறந்தால் நானும் இறப்பேன் என்கிறீர்! சாகிற மனுஷன் சொல்லிவிட்டா சாவான்? குரைக்கிற நாய் கடிக்கமாட்டாதே என்று தமிழ்ப் புலவர்கள் சொல்லலாமல்லவா?

அரையும் காலும்! சீண்டிரம் பிடித்த சின்னச்சனியன்! ஓ, இந்தித் தாயா? மன்னிக்கவேண்டும். வருக! வருக! ஆட்சி செலுத்தவருக! இதோ, பெங்கால்வில்க், ரத்தன் பார்டர் ஜம்பர், கிழிந்த ஆடையை அகற்றிவிட்டு, இதைக் கட்டிக்கொள்ளுங்கள்! முகத்திலே குட்டிகூரா, கழுத்திலே ஸுராஜ் மல்ஸ் நெக்கிலஸ், கங்கண் அணிந்து கொண்டு தலைவாரி ஜடைபோட்டு மலர் வைத்துக்கொள்ளுங்கள். ஒடிந்த கால், கை, விலாவுக்கு மூங்கில் பட்டைகள் வைத்துக்கட்டிக்கொள்ளுங்கள். அறுத்தமூக்கிலே அட்டையை வெட்டி ஒட்டவைத்துக் கொள்ளுங்கள். யாராவது கேட்டால் 'பேஷன்' என்று சொல்லிவிடலாம். ஏ, குரங்குகளே, கோட்டான்களே, மதிப்பிற்குரிய மண்டைக்கர்விகளே, குட்டிச்சுவர்களே, எருமைகளே, அறியாமையின் சிகரங்களே, சாணப்புழுக்களே, மாமிசப்பிண்டங்களே, சண்டாள மமதையாளர்களே! கூறுங்கள் "தமிழ் ஒழிக. கட்டாய இந்தி வாழ்க!" என்று.

இதுபோல ஆளவந்தவர்கள் கூறவில்லையே தவிர, செயலில் காட்டிவிட்டார்கள் — காட்டிக்கொண்டும் இருக்கிறார்கள். எதிர்ப்புக் கண்டு கட்டாயம் ஆக்கினாராம் இந்தியை! என்னே அறிவுலகு? இல்லாத ஓர் படைக்குப்பொல்லாத சட்டம் செய்து தடை விதித்தவர் குழாமின் ஒருவரல்லவா?

நூற்றுக்கு எண்பத்தைந்து பேருக்கு தமிழ் எழுதப்படிக்கத் தெரியாத நிலையிலிருக்கிறது இன்றையத்தமிழகம்! இந்த நேரம் இந்திபுகுத்த வந்த மந்திரியைச் சந்திசிரிக்குமே என்று சிரிப்பொரு பக்கம்—ஆத்திரம் மறுபக்கம் அதிகமாக! முன்னமோர் தடவை 25—2—38-ல் இந்தி புகுத்தப்பட்டு, இடையிலே 22—5—39-ல் துவண்டு 21—2—40-ல் மாண்டு போன செய்தி, வரலாறு கண்டிரா மொழிப் போராட்டமாகி தமிழுக்கும், தமிழருக்கும் வெற்றி கிட்டியது ஆச்சாரியார் ஆட்சியிலே!

இப்போது தினவெடுத்த திராவிடத் தமிழர் விழித்துக் கொண்டனர். ஈராண்டு வரை விட்டுவைக்கமாட்டார்கள் என்பது நமக்குத் தெரியும். தமிழ் ஆசிரியர்களே உங்களுக்காகச் செலவிடப்பட வேண்டிய இரண்டு லட்ச ரூபாய் இன்று இந்தி கற்றுக்கொடுப்போருக்கென ஒதுக்கப்பட்டுள்ளது! உங்கள் வயிற்றிலே மண் விழுந்தால் என்ன செய்வீர்கள்? தமிழ் அன்னையே மழலை மொழி பேசி மகிழ்விக்கும் உன் குழந்தையின் கழுத்தைத் திருகினால் என்ன செய்வாய்? தமிழா நீ அருந்தும் அமுதமாம் தமிழில், நஞ்சாம் இந்தி கலந்தால் என்ன செய்வாய்? நாங்கள் சிறைக்குள் நண்ணோம் எனநவின்ற நாவலர்! உன் தாய் உயிருக்குப் போராடுகிறாள். குருதியை! உன் தியாகம் உன் சந்ததியார்க்கு உவகையூட்டும். செத்தவாழ்வு வாழ்வதைவிட சாவின் முத்தமே மேல்! சிறைச்சாலையின் அணைப்பே இன்பம்! தமிழ்த்தாயின் விலங்கொடிக்கக்கிளம்பு! அதோ கவனியுங்கள்! "மங்கை யொருத்திதரும் சுகமும் எங்கள் மாத்தமிழ்க்கீடில்லை என்றுரைப்போம்!" முரசொலி முழங்கி பாசறை கிளம்பப்போகிறீர்களா? பாசுரம் பழைய பாணியிலே அமைக்கப் போகிறீர்களா? என்ன செய்யப்போகிறீர்கள்? வாழ்க தமிழ்! வெல்க திராவிடம்!

"மதுரை மன்னன்"

## புதிய வெளியீடுகள்.

★

1. தீண்டாமை ரூ 1—8—0
2. இதோ! பெரியாரில் பெரியார் 0—6—0
3. திராவிடக் கழக லட்சியம் 0—4—0
4. மொழி—எழுத்து 0—4—0
5. வாழ்விலோர் திருநாள் 0—4—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

விற்பனை உரிமையாளர்

நாதன் கம்பெனி லிமிடெட்

கச்சேரி வீதி, ஈரோடு.

---

நீ என்ன செய்யப்போகிறாய்?

கம்பன் கதையிலே கதை நீக்கிக் காவியத்தைப் புகழ்ந்த ரவிகமணியே, கடற்கரையிலே கவிஞர்களைப்பேட்டி காணும் சேதுபிள்ளையே, தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா என வீறுபேசிய நாமக்கல்லாரே, நந்தமிழை மீட்கப்போகிறீர்களா? நாமொன்றறியோம் பராபரமே எனப் பாசுரம் பாடித் தமிழை இந்திக்கு, வீணையொலியைக் கர்த்தபக் குரலுக்கு, கன்னியைக் கிழவனுக்கு, விடுதலையை அடிமைக்கு, அறிவை அறியாமைக்கு அடகுவைக்கப் போகிறீர்களா? என்ன செய்யப்போகிறீர்கள்?

முன்பு ஆயிரத்து இருநூற்று எழுபத்தொன்று! இப்போது பன்னிரண்டாயிரத்து எழுநூற்றிப் பத்து ஆக்க முன்வாருங்கள்! கட்டாய இந்திக்குச் சமாதி வைக்க, தமிழ் வாழ, தமிழினம் வளர, தமிழகம் தழைக்க, கிளம்பு! மரணசாசனம் தயாரித்து விட்டுக் கிளம்பு! மதியீனருக்கு மதியூட்டக் கிளம்பு!

தமிழா! புறப்படு! தாமதம் வேண்டாம் இந்தி ஒழியும் வரை சிந்து உன்

---

## புதிய பதிப்பு

விற்பனைக்குத் தயார்!

★

1. பணம் பிடுங்கிப் பார்ப்பனர் ரூ. 0—14—0
2. பெண் ஏன் அடிமையானாள் 0—8—0
3. இயற்கை வழி ஆத்மீகவழி 0—4—0
4. அகத்தியர் ஆராய்ச்சி 0—3—0

வியாபாரிகளுக்குக் கமிஷன் உண்டு.

கிடைக்கும் இடம்

நாதன் கம்பெனி லிமிடெட்

கச்சேரி வீதி, ஈரோடு.

## வெள்ளைக்காரன் வெளியேறி விட்டானாம்!

உலகிலேயே மிகப் பிரமாண்டமான தொரு செயற்கை உரம் தயாரிக்கும் தொழிற்சாலையை, பீகார் மாகாணத்தில் சிந்துஹிரி என்னும் இடத்தில் அமைத்து வருகிறார்கள். அதற்கு வேண்டிய யந்திர சாதனங்களின் மதிப்புமட்டும் சுமார் 20 ரூ. கோடி.

அதில் 100-க்கு 90 பங்கு யந்திரங்களுக்கு பிரிட்டனுக்குத் தான் ஆர்டர் செய்யப்பட்டிருக்கிறதாம்!

மேற்கண்ட யந்திரங்கள் சப்ளை செய்வதில சுமார் 80 வெள்ளைக்காரக் கம்பெனிகள் சம்பந்தப்பட்டிருக்கின்றனவாம்!

பிரிட்டிஷ் நிபுணர்கள் தான் அந்தத் தொழிற்சாலையை நிர்மாணம் செய்வார்களாம்!

இந்த மாதிரியான ஒப்பந்தம் இருக்குமானால் வெள்ளைக்காரன் ஏன் வெளியேறமாட்டான்?

## சீர்திருத்த திருமணம்.

சேலம் ஜில்லா பாண்டமங்கலத்தில் 14—7—48-காலை 11-மணிக்கு பெரியண்ண வைத்தியர் வீட்டில் திருச்சி டாக்டர் க. பிச்சைமுத்து அவர்கள் தலைமையின் கீழ் வெ. ராமசாமிக்கும்— பெ. காமாச்சி அம்மையாருக்கும் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

அதுசமயம் தோழியர் எம். செல்லக்கண்ணு சீர்திருத்தப் பாடல்கள் பாடினார். பல தோழர்கள் "சீர்திருத்தத் திருமணம்" என்பது பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். மணமக்களுக்கு அன்பளிப்பும் வாழ்த்துப் பத்திரங்களும் வாசித்தளிக்கப்பட்டது. தலைவர் முடிவுரை கூறியபின், வெ. ம. மோகன் நன்றிகூற திருமணம் இனிது முடிவுற்றது.

இதன் நினைவாக "இந்தி எதிர்ப்பு அறப்போர் நிதிக்கு" ரூ. 2-ம் "விடுதலை"க்கு ரூ.1-ம் "திராவிடன்ரூ. 1ம் "குடிஅரசு ரூ. 1,ம் திருச்சி திராவிட மருத்துவர் கழகத்திற்கு ரூ. 1ம்,பாண்டமங்கலம் திராவிட மருத்துவர் கழகத்திற்கு ரூ. 1ம், நன்கொடை அளிக்கப்பட்டது.

[4ம் பக்கத் தொடர்ச்சி]

முடிந்தது. மீண்டும் தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கிறோம், உலுத்துக்கிடக்கும் திராவிட சமுதாயம் உயர்வடைய வேண்டுமானால் தனியரசு பெற்றால் தவிர முடியாதென்ற உண்மையை உணர்ந்து அதற்காக அல்லும் பகலுமாக. இந்த நிலையில் மீண்டும் தமிழ் நாட்டில் இந்தி கட்டாயப் பாடமாகப் புகுத்தப்பட்டுவிட்டது. அரசியல் ஆதிக்கத்தில் நம்மை அடிமைப்படுத்தியிருக்கும் வடநாடு, மொழித்துறையிலும் தமிழகத்தை அடிமைப்படுத்த முயற்சிக்கிறது. இதை எதிர்த்துப்போராடும் உரிமையும், கடமையும் நாட்டிலே உள்ள நல்லறிவாளர்கள் அத்தனை பேருக்கும் உண்டு. போராட்டத்திற்குப் பெரியார் அவர்களையே தலைமை வகிக்கும்படி பேராசிரியர் நாவலர் பாரதியார் அவர்களும் கேட்டுக் கொண்டார்கள். பெரியாரும் தலைமை தாங்கிப் போர் முரசு கொட்டிவிட்டார். புரட்சி இலக்கியத்தின் இரண்டாவது அத்தியாயத்தை எழுதத் துவக்கிவிட்டோம். தமிழுக்குத் தீங்கு வந்தவுடன் நான் மட்டில் தனித்திருக்கப் போவதில்லை, ஒன்றுபட்டுப் போராடி வீழ்த்துவோம் இந்தியை என்று வீரமுழக்கம் செய்கிறார் சுயமரியாதை இயக்கத் தலைவர் பாண்டியனார் அவர்களும்!

என்னருமை இளைஞர்களே! தித்திக்கும் தேன் மதுரத்தமிழிருக்கையில் தீங்குள்ள இந்தியை ஏன் இங்கு புகுத்துகிறீர்கள்? அது எமக்குத் தேவையில்லை என்று ஆட்சியாளருக்கு அறிவித்திடுங்கள்! இல்லை இல்லை முடியாது, புகுத்தியே தீருவோம் என்று கூறிடின், முடியவே முடியாது எதிர்த்திடுவோமென்று முழக்கம் செய்யுங்கள்! "தமிழ் என்னில் எம்முயிர் பொருளாம்" இதைப் பறித்திட எம் மொழி புகுத்திடினும் அதை வீழ்த்திடுவோம் என்று கூறுங்கள்! உயிர் நமக்கு வெல்லமல்ல, தமிழைக்காக்க உவந்தளிக்கத்தயங்கமாட்டோமென்று முரசு கொட்டுங்கள்! தாய்மொழிக்குத் தீங்கு வந்த பின்னும் தமிழர்கள் வாழ்வதில் பயனில்லை என்பதினையுணர்ந்து படைவரிசையில் முன்னணி வீரர்களாக வந்து சேருங்கள்! "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ்" அதை ஏங்கவிடோம் உயிர் போகும் வரை என்று பரணி பாடுங்கள்! மாற்று மொழிக்குத் தமிழை மண்டியிடச் செய்துவிட்டு, நாட்டில் நடைப்பிணமாக வாழ்வதைவிட தமிழைக்காக்க உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்தேனும் தமிழைக் காப்போம் என்று உறுதி கூறுங்கள்! தமிழ்த்தாய் உங்களைக் கேட்கிறாள், அவளுக்கு உங்கள் உயிரும், இரத்தமும் தேவையாம், தயங்காமல் கொடுங்கள்! நாட்டில் புரட்சிப்புயல் வீசத் தொடங்கிவிட்டது! நாடு பிணக்காடாகப் போகிறது! முத்தமிழ் மணம் எத்திக்கும் கமழ்ந்த நாட்டில் பிணவாடை வீசப்போகிறது! தமிழ் மொழிக்காகப் போராடிக் களத்திலே மாண்ட காளையர்களின் பிணம் இரத்த வெள்ளத்தில் மிதந்தோடிக் கொண்டிருக்கும்! வானத்தில் வட்டமிடும் வல்லூறுகள் வீர இளைஞர்களின் விழிகளையும் காதுகளையும் கொத்தித் தின்று கொண்டிருக்கும் ஓர்புறம்! நாயும், நரியும் நற்றமிழர் பிணத்தை சுவைத்துக் கொண்டிருக்கும் மற்றொருபுறம்! இது போன்ற இன்னும் பயங்கரமான நிலைக்கு மொழிப் புரட்சி நம்மை அழைத்துச் செல்லும்! வீரத் தமிழர்களின பரம்பரையில் தோன்றிய நமக்கு இது பழக்கமான பாதைதான், தயங்காமல் முனைனேறுங்கள்! கடைசியில் வீழ்ந்தது இந்தி. வெற்றி தமிழுக்கும்—தமிழருக்கும் என்ற வெற்றி முழக்கத்துடன் புரட்சி இலக்கியத்தை இரண்டாவது அத்தியாயத்துடன் எழுதி முடிப்போம். வாழ்வதெனில் தமிழுடன் வாழ்வோம். இல்லையேல் சாவோம்—இலக்கியத்தில் இடம்பெறுவோம்.

*      *

நமது புரட்சி இலக்கியத்தில் கவிஞர் பாரதி தாசனின் கவிதைகள் ஒப்பற்ற இடம் பெற வேண்டியவை. அவருடைய கவிதைகள் உறங்கிக் கிடந்த தமிழனுக்கு உணர்ச்சியூட்டிப் போராட்டத்திற்கு அழைத்துச் சென்று புதுவாழ்வு பெற்றுத் தந்தவை. வருங்காலப் போராட்டத்திற்கு அவருடையகவிதைகள் நமக்குச் சிறந்த வழிகாட்டி. இதோபாருங்கள்! பாரதிதாசனின் கவிதைகளுக்கேற்ப ஒரு சிறு படப்பிடிப்பு. வருங்காலத்தில், நாட்டில் இதுபோலப் பல இடங்களிலே நடக்கும் என்பது என் எண்ணம். நமது புரட்சி இலக்கியத்தில் ஒரு சிறுகதை, எனது சிந்தனையில் சிதறியவை.

அன்று காலைக் கதிரவனின் பொற்கிரணங்கள் என் மேல் பட்டதால் உறக்கத்தை விட்டெழுந்து படுக்கையில் உட்கார்ந்தேன். தூக்கத்தினால் ஏற்பட்ட சோம்பல் என்னைவிட்டு நீங்காததால் மீண்டும் படுக்கையில் படுத்தேன்.

இந்திக்குத் தமிழ்நாட்டில்
ஆதிக்கமாம்—நீங்கள்
எல்லோரும் வாருங்கள்
நாட்டினரே......

என்று ஒரு இளைஞன் தெருவில் பாடிக்கொண்டு சென்றான். ஆம்! சென்ற மொழிப் போராட்டத்தின் போது நாட்டு மக்களுக்குக் கவிஞர் பாரதிதாசன் விட்ட அழைப்பு அது. மீண்டும் அந்த அழைப்பின் ஒலி கிளம்பியதைக் கேட்டவுடன் திரும்பவும் தமிழகத்தில் மொழிப் புரட்சி ஏற்பட்டுவிட்டதோ என்ற திகைப்பு ஏற்பட்டது எனக்கு. தலைமை அமைச்சரும், கல்வியமைச்சரும் தமிழராகவே இருக்கையில் தமிழ் மொழிக்குத் தீங்குவராது என்று நினைத்துக்கொண்டிருந்தேன்.

தூங்குதல் போன்றது
சாக்காடு—பின்னர்
தூங்கி விழிப்பது நம் பிறப்பு

என்று பாடிக்கொண்டே வந்தாள் என் வாழ்க்கைத் துணைவி கோமளம். தூங்குவது—செயலற்றுக் கிடப்பது. நிரந்தரமாகச் செயலற்றுப் போயின் பிணம் என்றுதான் கருதப்படும். நாம் தூங்குகிறோம், பின் விழித்தெழுந்து செயலாற்றுகிறோம். இதுதான் உயிர்வர்க்கத்தின் இயற்கை. இந்த உண்மையைக்கவிஞரின் கவிதை மூலம் உணர்த்தினாள் என் காதலி. அவளுடைய முகத்தில் கோபமும், உறுதியும் காட்சியளித்தன. என்கையைப் பிடித்துப் படுக்கையை விட்டுத் தூக்கி நிறுத்தினாள். எனக்கு ஒன்றும் புரியாமல் திகைத்துப்போய்விட்டேன். "இந்தி தமிழ் நாட்டில் கட்டாயப் பாடமாக புகுத்தப்பட்டுவிட்டது! புறப்படுங்கள் போர்க்களம் செல்வோம். செயலாற்றும் சந்தர்ப்பம் வந்துவிட்டது" என்று அழைத்தாள். அவளுடைய உணர்ச்சியிலிருந்து துள்ளி எழுந்த ஆவேசம் நிறைந்த மொழிகள் என் உறக்கத்தின் சோகத்தைக் கலைத்தது.

எப்பக்கம் வந்து
புகுந்துவிடும்—இந்தி
எத்தனை பட்டாளம்
கூட்டி வரும்?

என்ற கேள்வியைக் கேட்டேன். "பட்டாளமென்ன பெரிய படை திரட்டி வந்தாலும் பார்த்திடுவோம் ஒருகை" என்று கூறினாள். விழிப்புற்ற வீறுகொண்ட இளம் காளையர்கள் உள்ளவரை இந்தி தமிழகத்தில் புகமுடியாது" என்று கூறினேன். "ஆம்" என்றாள். அதேசமயத்தில்,

பங்கம் விளைந்திடில்
தாய் மொழிக்கே—உடற்
பச்சை ரத்தம் பரிமாறிடுவோம்!

என்று கூறிக்கொண்டே வந்தான் எனது தோழன் ராஜு. வெள்ளைக் கதர்ச் சட்டை அணிந்திருப்பவன் அன்று கருப்புச் சட்டை அணிந்திருந்தான். தேசீயப் போதையில் மூழ்கிக் கிடந்த எனது தோழனின் தெளிவு பெற்ற நிலை கண்டவுடன் செப்ப முடியாத மகிழ்ச்சி என் உள்ளத்தில் பொங்கியெழுந்தது. அரசியல் கருத்தில் மட்டும் வேறுபட்டிருந்த நாங்கள் அதிலேயும் ஒன்றுபட்டுவிட்டோம். "புறப்படுவோமா" என்று கேட்டான். "போர்க்களத்திற்கா தோழரே! அங்கு சாவு நமக்கு வரவேற்பளிக்கக் காத்துக் கொண்டிருக்குமே" என்று கொஞ்சம் தயக்கத்துடன் கேட்டேன்,

ரோஜா முத்தையா

செந்தமிழ்க்குத் தீமை
வந்தபின்னும்—இந்தத்
தேகமிருந்தொரு
லாபமுண்டோ?

என்று ஆத்திரத்தோடு கேட்டான். அவன் கேட்டது எனக்கு இடி முழக்கம்போல் இருந்தது. ஆம், தமிழ் வீழ்ந்த பின்னர் தமிழன் நடைப்பிணமாகவாழ்வதைவிட மொழிப்போராட்டத்தில் சாவதுதான் மேல். உயிர் நமக்கு வெல்லமல்ல என்ற உண்மையை உணர்ந்து,

தீங்குள்ள இந்தியை
நாம் எதிர்ப்போம்—உயிர்
தித்திப்பை எண்ணிடப்
போவதில்லை!

என்று அவன் அழைப்பிற்குப் பதில் கொடுத்தேன். அதுவரையில் என்னை, கோழையோவென்று எண்ணிக்கொண்டிருந்த என் காதலிக்கு நான் வீரனாக மாறிவிட்டது வியப்பாக மட்டுமல்ல விவரிக்க முடியாத மகிழ்ச்சியாகவும் இருந்தது.

அற்பமென்போம் அந்த
இந்திதனை—அதன்
ஆதிக்கந் தன்னைப்
புதைத்திடுவோம்.

என்று நாங்கள் உறுதிகொண்டு புறப்பட்டோம். வீழ்ச்சியுற்ற தமிழகம் எழுச்சியுற்றால் இந்திமட்டுமென்ன வேறு எதுவானாலும் வீழ்ச்சியடையப் போவது உறுதிதானே? நானும் தாய்மொழிக்காகத்தாயுடன் சிறைசெல்லப் போகிறோமே என்ற மகிழ்ச்சியால் என் காதலியின் கரத்திலிருந்த குழந்தை சிரித்தது. போர்க்களம் நோக்கிப் புறப்பட்ட நாங்கள் வீட்டின் வெளிப்புறம் வந்து வீதியின் மறுபக்கம் திரும்பிப் பார்த்தோம்.

சிங்கமென்ற இளங்
காளைகளே—மிகத்
தீவிரங்கொள்ளுவீர் நாட்டினிலே!

என்று வீரமுழக்கம்செய்துகொண்டு வந்தனர் இளைஞர் பலர் கூட்டமாக. அவர்களைக் கண்டவுடன் "கிழம் பிற்றுகாண் தமிழர் சிங்கக்கூட்டம் கிழித்தெறியத் தேடுதுகாண் பகைக் கூட்டத்தை" என்று பாரதிதாசன் கூறியது ஞாபகத்திற்கு வந்தது. நாங்களும் அந்தக் கூட்டத்துடன் சேர்ந்து போர்க்களம் நோக்கிச் சென்றோம். காணுமிடமெல்லாம்,

எங்கள் உடல் பொருள்
ஆவியெல்லாம்—எங்கள்
இன்பத்தமிழ்மொழிக்கே தருவோம்!

என்று மக்கள் உறுதி கூறினர். தமிழில்லையேல் வாழ்வில்லை என்பதை நற்றமிழர் உணர்ந்து கொண்டனர். தெருவழியாகச்சென்று கொண்டிருந்தவர்கள், தித்திப்புப் பண்டங்களைத் தின்றுகொண்டிருந்த குழந்தைகள், பள்ளிக்குச்சென்ற இளைஞர்கள், வீட்டை விட்டு வெளியேவந்த தாய்மார்கள் ஆகியோர் அத்தனை பேரும் எங்களுடன் சேர்ந்து களம் நோக்கி வந்தனர்.

அய்யோ, எத்தனை
அதிர்ச்சி, உற்சாகம்
சமுத்திரம் போல்
அமைந்த மைதானம்!
அங்கே கூடினார்
அத்தனை பேரும்
வீரத் தமிழன்
வெறி கொண்டெழுந்தான்
உரக்கக் கேட்டான்
உயிரோ நம் தமிழ்?
அகிலம் கிழிய
ஆம்! ஆம்! என்றனர்.

மக்கள் ஊட்டிய உற்சாகத்தால் உந்தப்பட்ட நாங்கள் மேடைமீதேறி "இந்திக்குச் சலுகை தந்திடும் அந்த ஈனரைக்காறியுமிழ்ந்திடுவோம். இந்தி வீழ்க, தமிழ் வாழ்க" என்று கூறினோம். தமிழ்த்தாயின்மீது பூட்டப்பட்ட விலங்கை உடைத்தெறியத் தயங்காமல் முன்வந்த எங்கள் கையில் அரசாங்கப் பரிசாக விலங்கு பூட்டப்பட்டது. ஆம், நாங்கள் கைதியாக்கப் பட்டு விட்டோம்!

சிறைச்சாலையை நோக்கி அழைத்துச் சென்றார்கள். அப்பொழுதுதான் நான் முதல்தடவையாகச் சிறைக்குப் போகிறபடியால் சிறை எப்படியிருக்குமோ என்ற எண்ணம் எனக்கு உண்டாகியது, பயத்தாலல்ல! இதை எப்படியோ என் முகக்குறியிலிருந்து தெரிந்து கொண்டான் கையில் விலங்குடன் என் அருகில் வந்துகொண்டிருந்த ராஜு.

மாங்குயில் கூவிடும்
பூஞ்சோலை—நம்மை
மாட்ட நினைக்கும் சிறைச்சாலை!

என்று பாடினான். அவனுடைய முகத்தில் கேலிச் சிரிப்பும் வீரமும் தோன்றியது. ஆம், வறுமையால் பீடிக்கப்பட்டு—சமுதாயக் கொடுமையில் அகப்பட்டு, வாழ்வில்வதங்கி, சிறு குடிசையில் சீரழிந்து கிடக்கும் நமக்குச் சிறை, மாங்குயில் கூவும் பூஞ்சோலை மட்டுமல்ல, சிலுசிலுக்கும் தென்றலில் சிரித்து விளையாடக் கிடைத்திருக்கும் சிங்கார மாளிகையும் கூடத்தான் என்று உணர்ந்தேன்.

எங்கவிடோம் தமிழ்த்
தாய் தனையே—உயிர்
இவ்வுடலை விட்டு நீங்கும் வரை

என்று பரணிபாடிக்கொண்டே சென்றோம்! சிறையில் தள்ளி அடைத்தார்கள். கொடுமை அங்கு கூத்தாடியது! அதனால் தமிழ்நாட்டு நாங்கள் கொண்டிருக்கும் காதலைக் குறைக்க முடியவில்லை. நாட்கள் சில ஏகின. நாடே சிறைக்கூடமாகி விட்டதா? அல்லது நாட்டு மக்களெல்லாம் சிறைக்கு வந்து விட்டார்களா? என்று திகைக்குமளவு சிறைக்கூடத்தை நோக்கி மக்கள் சிரித்தவண்ணம் நுழைந்து கொண்டிருந்தனர். சிறை சிங்கார மாளிகையாக அல்ல,சிற்றூர்போல் காட்சியளித்தது. அங்கு வீணையின் நாதமில்லை; வீரர்களின் வெற்றிச்சிரிப்பொலி வீசிக்கொண்டிருந்தது! சோற்றுப் பிண்டங்களும் சுகபோகிகளும் அங்கில்லை, சுத்தவீரர்களே இருந்தனர்! அலைபோல வளைந்திருக்கும் அமெரிக்கன் கிராப்பை அழகாகச் சீவிக்கொண்டு, பகட்டான உடையுடுத்திப் பழக்கமான நடையுடன் "வில்ஸ்" சிகரட்டுங்கையுமாக வீதியிலே உலாவுகின்ற வீணர்களல்ல அங்கிருந்தவர்கள். தமிழுக்கு தீங்கென்றவுடன் "மங்கை ஒருத்தி தரும் சுகமும் எங்கள் மாத்தமிழ்க் கீடில்லை" என்று கூறி தயங்காமல் போர்கோலம் பூண்ட வீர இளம் காளைகள் தான் அங்கிருந்தனர். பனிரெண்டு முழப்பட்டுச் சேலையும், பனாரஸ் ஜாக்கெட்டும் உடுத்திக் கொண்டு, சூம்பிய முகத்திற்கு ஸ்னோவும், உலர்ந்த உதட்டில் சாயத்தையும் பூசிக்கொண்டு அன்ன நடை நடந்து, கலுக்கென்று சிரித்துக் கடைக்கண் வீசிடும் "மினுக்கிட்டான்" பூச்சிகள் அங்கில்லை. மொழிப்போராட்டம் என்ற செய்தி கேட்டவுடன் எங்கள் பங்கை நாங்கள் இழக்கமாட்டோமென்று கூறி படைவரிசையில் அணிவகுத்து வந்த வீரத் தாய்மார்கள் அங்கிருந்தனர். "உண்பதுவும், உடுப்பதுவும், உறங்குவதும், உத்தியோகம் பார்ப்பதுவும் தவிர வேறொன்றும் யாமறியோம் பராபரமே" என்ற ரீதியில் சுயநலக் குட்டையிலே வாழ்கின்ற மண்டூகங்கள் அல்ல அங்கிருந்தவர்கள். மாற்றுமொழிக்கு தமிழை மண்டியிட விடமாட்டோம் எனக்கூறிடும்மாவீரர்கள்! தமிழ்க்கலையையும் தமிழர் நாகரீகத்தையும் இந்தியைப் புகுத்தி அழித்து விடலாம் எனக்கருதும் எத்தர் கூட்டத்தின் சூழ்ச்சியை உணர்ந்து அதற்கு இடங்கொடுக்கமாட்டோமெனக் கூறிடும் பேரறிவாளர்கள்! நாடு—மக்களின் வாழ்வு—கலை இவற்றின் பாதுகாவலர்கள் தான் சிறையிலிருந்தனர்.

சிலமாதங்கள் சென்று விட்டன. திடீரென்று ஒருநாள் காலை பூட்டிக் கிடந்த சிறைக்கூடத்தின் இரும்புக் கதவுகளை தூள் தூளாக உடைத்தெறிந்தனர் தமிழர்கூட்டம் "வீழ்ந்தது இந்தி வெற்றி தமிழுக்கு" என்ற வெற்றி முழக்கம் விண்ணதிர ஒலித்தது. நாட்டின் நிலை தலைகீழாக மாறிவிட்டது! புதியதோர் தமிழகம் பூத்துவிட்டது. அதைக் கண்ட எங்கள் உள்ளத்தில் உவகையற்ற இன்பவெள்ளம் பெருக்கெடுத்தோடியது. நடந்தோம் நானும் அவளும் என் தோழருமாக வீட்டை நோக்கி. இந்தி வீழ்ந்தது என்ற செய்தி கேட்ட மாணவர்களெல்லாம் சிரித்த முகத்துடன் சென்றனர் பள்ளிக்கு. தெருவெல்லாம், நாடெங்கும் திருநாள் கொண்டாடினர்! வீடெல்லாம் விருந்துக் கூடமாக இருந்தது!

[3ம் பக்கத் தொடர்ச்சி]

ஆகையால் மனிதன தோன்றுவதற்கு முன்உள்ள 297 கோடி வருஷங்களில், அநேக கோடி வருஷங்கள், உலகில் ஜீவ வர்க்கமாவது, தாவர வர்க்கமாவது இல்லாமல் இருந்திருக்க வேண்டும். அப்பால் தாவரவர்க்கந்தோன்றிப் பலகோடி வருஷம் கழித்தே ஜீவவர்க்கந் தோன்றியிருக்கவேண்டும். ஜீவவர்க்கந் தோன்றியபின் உள்ள காலத்தை முதுகெலும்பில்லாப் பிராணிகளின் யுகம், ஊரும்பிராணிகளின் யுகம், பக்ஷி யுகம், முலைப்பால் ஊட்டும்பிராணிகள் யுகம் என்று அவ்வக்கா லங்களில்சிறப்பாய்ப் பரிணமித்த பிராணிகளைக் கொண்டு பிரித்தனர். பரிணாமக் கொள்கையின் படி ஓர் வகைப்பிராணி வேறு பிராணியாக மாறுவதற்கு அநேககோடி வருஷங்கள் செல்லவேண்டும். மற்ற எல்லாப்பிராணிகளையும் விடச் சிறப்புள்ளவன் மனிதன் ஆகையால் இக்காலத்தை 'மனிதயுகம்' என்று சொல்லுகிறார்கள்.

### புராதன காலத்து மனிதன்.

ஆதி காலத்திய மனிதன், இப்போதுள்ள அவன் சந்ததியானைப்போல நாகரீகமுள்ள பிராணியல்ல. அவன் மிருகத்தினின்றும் அதிக வித்தியாசமில்லாத காட்டுமிராண்டியாகத் தான் இருந்தான். புல்லாய்ப் (தாவரமாய்) புழுவாய், ஊர்வனவாய், பறப்பனவாய், விலங்காய், (முலைப்பாலூட்டும் பிராணிகள்) மாறி மாறிப் பரிணமித்து, விலங்குகளில் வானரமாய், வானரத்திலிருந்து ஆதி மனிதன் தோன்றினான் என்பது டார்வின் என்ற விஞ்ஞானியின் ஆராய்ச்சி. இந்த முடிவை மற்ற விஞ்ஞானிகளும் ஒப்புக்கொண்டனர். ஆகவே குரங்கிலிருந்து வாலில்லாக் குரங்காகிப் பின் மனிதனாகிய நமது முன்னோர்கள், முதலில் மனிதத்தோற்றம் பெற்று உலகில் காட்சியளித்தது மூன்று கோடி வருஷங்களுக்கு முன்னால். அதிலிருந்து மாறி மாறித்தற்போதுள்ள நாகரீக நிலைக்குவந்திருக்கும் மனிதன் இன்னும் மூன்றுகோடி வருஷங்களுக்குப் பின்னால், இப்போதிருப்பதை விட மிக மேன்மை பொருந்தியவனாகவும், அளவிறந்த மூளைத்திறமையுடையவனாகவும் இருப்பானென்று ஊகிக்கப்படுகிறது. நாளுக்கு நாள் மனிதன் தன்னுடைய அறிவிலும், ஆற்றலிலும், தோற்றத்திலுங்கூட விருத்தியடைந்து, மேன்மைக்கு வருகிறான் என்பதே, ஜீவ தத்துவ சாஸ்திரம் (Biology) மனித வர்க்க சாஸ்திரம் (Anthropology) முதலிய விஞ்ஞானக் கலைகள் தெரிவிக்கும் உண்மை.

### உலகின் வயது.

உஷ்ணக்காற்றாயிருந்து, உருகிய பிழம்பாகிப்பின் குளிர்ந்து இறுகிக் கெட்டியான ஆதிகாலத்தில் ஏற்பட்ட உருக்குப் பாறைகளின் வயதை அளந்தறிந்து அதன்மூலம் உலக வயது சொல்லப்படுகிறது. இதுவரை பூதத்துவ சாஸ்திரிகளால் ஆராய்ந்தறியப்பட்ட பாறைகளில் மிகவும் பழமையான பாறைகளின் வயது சற்றேறக் குறைய 1500 மில்லியன் வருஷங்கள் என்று தெரிகிறது. (மில்லியன் என்பது 10-லக்ஷ வருஷம்.) ஆனால் உலகம் தோன்றிய காலம் 3000-மில்லியன் வருஷங்கள் இருக்கலாமென்று யூகிக்கப்பட்டு வந்தது. இந்த மதிப்பை உறுதிப்படுத்தப்போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. ஆதிகாலத்திய உருக்குப்பாறைகள் எல்லாம் பூமியின் அடியில் ஆழ்த்திப் புதைந்து கிடப்பதால் மிகவும் பழமையைத் தெரிவிக்கும் அப்பாறைகள், பூதத்துவ நிபுணர்களின் ஆராய்ச்சிக்குக் கிடைக்காமலிருப்பதே, பூமியின் வயதைத்திட்டப்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறது.

தென் கென்சிங்டன் நகரின் விஞ்ஞானக் கலாசாலைப் பேராசிரியர், பன்னத் என்பவர் புதிய பரீட்சைகளைக் கொண்டு உலகத்தின் வயதை ஒருவாறு நிர்ணயஞ் செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

உலகத்தின் பல பாகங்களிலிருந்து தேடிக்கொண்டு வரப்பட்ட சுமார் 30 வானக் கற்களை ஆராய்ச்சி செய்து அவைகளின் வயது சுமார் 3000 மில்லியன் (முந்நூறு கோடி) வருஷங்கள் இருக்கலாமென்று கண்டறிந்ததாகவும், இந்த வானக் கற்கள் எல்லாம் உடைந்து போன ஒருகிரகத்தின் சிதைவுகள்என்பதனால், அந்தக்கிரகத்தின்வயதுமேற்படி வானக் கற்களின் வயதேயாகும் என்பதாகவும், பூமியும் மற்ற கிரகங்களும் ஒரே காலத்தில் ஏற்பட்டதாக அனுமானிக்கப்படுவதால் நமது பூமியின் வயதும் மேற்படி வானக் கற்களின் வயதுக்குச் சற்றேறக் குறையச் சரியாய் இருக்க வேண்டுமென்றும் 'பன்னத்'சாஸ்திரியார் சொல்லுகிறார். இவைகளில் இருந்து உலகத்தின் வயது சற்றேறக்குறைய முந்நூறு கோடி (3000-மில்லியன்) வருஷங்கள் என்று ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். இவ்வளவு நீண்ட கால அளவைச் சரிவரக் கிரஹித்துக்கொள்ளத்தக்க அறிவுணர்ச்சியுள்ளவர்களே, உலகத்தின் வளர்ச்சியையும், பரிணாமவாத முறையையும் அறிந்துகொள்ள முடியும்.

### அடுத்த நூற்றாண்டில் உலக நிலை.

100-வருஷங்களுக்குப் பின் உலக நிலை எப்படியிருக்கும் என்று தன் அனுபவங்களைக்கொண்டும், பிற அறிஞர்களின் ஆராய்ச்சி முடிபுகளினின்றும் அமரிக்கா தேசத்து இரசாயன சாஸ்திரிகள் சங்கத் தலைவராகிய மிஸ்டர். தாமஸ் மிட்ஜிலே என்பவர் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார். சோஸ்யம் அல்ல! விஞ்ஞானக் கலைகளின் வளர்ச்சியின் போக்கை அடிப்படையாகக்கொண்ட ஓர் உத்தேச சித்தாந்தம். அவர் சொல்லுவதாவது:—

"நம்முடைய முன்னோர்களும் நாமும் செய்த, செய்து வருகின்ற முயற்சிகளின் முழுப் பலனையும், இனிப் பிறக்கப்போகின்ற நம்முடைய் சந்ததியார்கள் பூர்த்தியாக அனுபவிப்பார்கள். 2035ல், யுத்தம், சண்டை, வியாதி, துக்கம், இவைகளுக்கு அர்த்தமே தெரியாது, இருக்கவும் முடியாது. மற்ற கிரகங்களுடன் போக்குவரத்துகள் கூட ஏற்பட்டுவிடும்.

இங்கேயிருந்து செவ்வாய்மண்டலத்திற்கும், சுக்கிர மண்டலத்திற்கும் யாத்திரை செய்து வருவார்கள். அதற்குப் போதிய சாவகாசமும் அந்தக் காலத்து மனிதர்களுக்கு இருக்கும். வேலை செய்ய வேண்டிய நேரம் மிகக் குறைந்து விடும். கூலியோ அதிகப்பட்டு விடும். எல்லாத் தொழில்களிலும் தினம் இரண்டு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யவேண்டிய அவசியம் இருக்காது. வைத்திய சாஸ்திர வளர்ச்சியால், மனிதனின் ஜீவியகாலம் அதிகரிக்கப்பட்டு, ஜனங்கள், நீண்ட பூரண ஆயுளுடனும், தங்கள் தேவைக்கு அதிகமான தன சம்பத்துடனும், உல்லாசமாகக் காலங்களிக்கப்போதிய அவகாசத்துடனும் இன்ப வாழ்வு நடத்துவார்கள். ரணம், க்ஷயம், விஷ ஜுரம் முதலிய ஆபத்தான வியாதிகள் இன்னதென்று கூட அவர்களுக்குத் தெரியாது. இவ்வியாதிகளை உண்டாக்கும் கிருமிகள், பொருட்காட்சிச் சாலைகளில் வைக்கப்பட்டிருக்கும். நகரங்களிலும் குப்பை கூளங்கள் சிறிதும் இருக்காது. சுகாதார சாஸ்திரம் நாம் இப்போது நினைக்க முடியாத வகையில் விருத்தியடைந்திருக்கும்.

இப்போது மனிதனுக்கு உணவளிக்கும் மிருகங்கள் மிகப் பெரியவைகளாக இருக்கும் பன்றிகள், மாடுகள் அளவு பருமன் உள்ளவைகளாயிருக்கும். கோழி முட்டை 'புட்பால்' (உதை பந்து) அவ்வளவு பெரியதாயிருக்கும். பசுமாடுகள் யானைகளை விடப் பெரியவைகளாகவிருக்கும்.

---

மேடையெல்லாம் தமிழரது வெற்றிப் பேச்சுத்தான்! நாடெல்லாம் தமிழ் மணம் வீசியது! இந்த நிலையைக் கண்டபொழுது இதைப்பெற, பட்ட துன்பமும், கஷ்டமும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து விட்டது. வெற்றி தமிழருக்கும்—தமிழுக்கும் என்ற வெற்றி முழக்கத்துடன், புரட்சி இலக்கியத்தை இரண்டாவது அத்தியாயத்துடன் எழுதி முடித்தனர்.

"புத்ததாசன்"

மொத்தத்தில் நம்முடைய உலகம் 'பாரடைஸ்' என்றுசொல்லும் மோக்ஷ லோசம்ாகமாறியிருக்கும்.

"Earth will be a Paradise in 2035" says Mr. Thomas Midgeley, president of the Association of American Chemists.

## எது நிஜம்?

"மிருக நிலையிலிருந்து காலக்கிரமத்தில் பரிணமித்துச்சிறந்த மனிதன் தன முன்னோர்களைவிட அறிவிலும் ஆற்றலிலும்விருத்தியடைந்திருக்கிறான், இன்னும் விருத்தியடைந்து வருகிறான்'' என்று கூறுகிறதுவிஞ்ஞானம்.

"ஆதியில் தேவர்களாயிருந்து நாளடைவில் அறிவிலும் ஆற்றலிலும் குறைந்து தற்போதுள்ள மனித நிலைக்கு வந்திருக்கும் மனிதர் இன்னும் கீழான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர்'' என்கிறது புராண ஞானம்.

. "100-வருஷங்களுக்குப் பின் உலகம் துக்கம், அநீதி, வியாதி முதலிய கொடுமைகளிலிருந்தும் விடுதலை பெற்று, எல்லோருக்கும் போகபூமியாக மாறிவிடும்'' என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

"இனிவருங்காலத்தில், அதாவது கலிமுற்ற முற்றக்காலம் ரொம்பக் கெட்டு, உலகத்தில் பசியும், பஞ்சமும், அக்கிரமும் அதிகரித்து மனிதன் மனிதனைத் தின்பான்'' என்று சாற்றுகின்றனர் புராணஞானிகள்.

"இந்த உலகத்தை இன்பமயமாகச் செய்து எல்லோரும் ஆனந்த வாழ்க்கை நடத்தலாம்'' என்று விஞ்ஞானம் அழைக்கின்றது.

"இந்தப் பிரபஞ்சம் மாயத் தோற்றம், உலகம் துக்கம் நிறைந்தது. இதில் பிறப்பதே மகாப்பாவம்'' என்று உலகை வெறுக்கச் செய்கின்றது, புராண ஞானம்.

"விஞ்ஞானம் காண்பிக்கும் நாகரீகப் பாதையே முன்னேற்ற மார்க்கம். அப்பாதையில் சென்று நமது துக்கத்தையும் குறைகளையும் நிவர்த்தித்துக் கொள்வோம்'' என்று நம்புகின்றனர், சீர்திருத்தவாதிகளான சுயமரியாதைக்காரர்.

"நமது புராண இதிகாசங்கள் காட்டியுள்ள பாதையிற் சென்று ஆதிகால நிலைமையை மீண்டும் அடைவதே இன்பம்''என்றுவாதிக்கின்றனர்பழமை போற்றும் புராணமரியாதைக்காரர்.

## மறுக்க முடியாத உண்மை.

குழந்தை கிழவனாகிறான். கிழவன் குழந்தையாக முடியாது. தகப்பன் தேடிவைத்த பொருளும் அறிவும் மகனுக்கு உதவுகின்றன. மகன் தேடிவைக்கும் பொருளைத் தகப்பன் அடைய நினைப்பது தவறு. குழந்தையின் வனப்பையும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும், தைரியத்தையும் கண்டு பொறாமையாற் பெருமூச் செறிந்து ஏங்குகிறான் கிழவன். ஆனால் கிழவனாரின் வளைந்த முதுகையும், தளர்ந்த நடையையும், நரைத்த தலையையும், பொக்கை வாயையும் கண்டு தானும் கிழவனாக விரும்பும் குழந்தை எங்கும் இருக்காது. நம்முடைய முன்னோர்களின் அனுபவங்களும், முயற்சிகளும் நமக்கு உதவுகின்றன. நம்முடைய முயற்சிகளுக்கு வழிகாண்பிக்கின்றன. ஆதலால் அவர்களைவிட நாம் சிறிது முன்னேறிச் செல்ல முடிகின்றது. அதுபோலவே, நம்முடைய முயற்சிகளின் முழுப்பலனையும் நம்முடைய சந்ததியார்கள் அனுபவிக்க முடிகின்றதால், நம்மிலும் அவர்கள் சிறப்பாயிருக்கக்கூடும். நம் காலம் பழங்காலத்தினும் சிறந்திருக்கிறது. வருங்காலம் இனியும் மேலானதாக இருக்கும் என்பதற்கு வேறு காரணம் தேவையில்லை. இந்தக் கருத்தைத் "டெனிஸன்'' என்ற ஆங்கிலக் கவி (Lord Tennison) வெகு அழகாகக் கூறியிருக்கிறார்.

I doubt not that through the-ages
One increasing purpose runs
And that the thoughts of men-get widened
Through the process of the-Suns-

பழங்காலம் மிகஅநாகரீகமானது. 'பொற்காலம்' அல்ல. தற்காலம் உள்ள ஒரு கூலிக்காரன் அனுபவிக்கும் சௌகரியங்கள் பழங்காலத்தில் ஒரு அரசனால்கூட அனுபவித்திருக்க முடியாது. ஆகையால் இருள் சூழ்ந்த பழமைக்கு அடிமைப்படுவது மடமை. பழமை நமக்கு அதிகாரியல்ல "காலம் வர வரக் கெட்டுப் போகிறது'' என்று தடித்தனமாய்ச் சொல்லுவது வாலிபத்தின் உயர்ந்த லட்சியங்களுக்கும், வாலிபரின் தீவிர முயற்சிகளுக்கும், தன்னம்பிக்கைக்கும், பொதுவாகத் தேச முன்னேற்றத்திற்கும், மகத்தான மன்னிக்க முடியாத கேடு சூழ்வதாகும். எனவே, இனிமேல் நம்முடைய பெரிய தம்பிகள், "காலங்கலிகாலம்! எல்லாம் கெட்டுப் போச்சு! உலகமே அழுகிக் கொண்டு வருகிறது!'' என்ற பழைய பல்லவிகளைப் பாடும்போது, "வாஸ்தவம்! காலம் கெட்டுத்தான் வருகிறது. எல்லாம் தலைகீழ்தான். ஆனால் இவ்வளவோடு நிற்காது. இன்னும் ரொம்ப ரொம்பக் கெட்டுப்போகப் போகிறது. உலகமே அழுகி நாறிப் போகும். ஆகையால் அன்பான பெரிய தம்பி, இந்தப் பாழும் உலகம் ரொம்பக் கெட்டு நாற்றம் எடுப்பதற்கு முன்னால், தர்மபுத்திரனாகிய நீ நல்ல உலகத்தைத் தேடிக்கொள். நல்லவர்களுக்கு இது காலமல்ல, இந்த உலகத்திலும் இடமில்லையென்று நீயே சொல்லியிருக்கிறாயல்லவா?'' என்று சொல்வதைவிட வேறு என்ன பதில் சொல்ல முடியும்?


# குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

☆

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| ராவணப் பெரியார் | 0 | 8 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்ம ராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார்பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம்2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,
கச்சேரி வீதி, ஈரோடு.

94 C. பிராட்வே,
சென்னை.


Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutchery street. ERODE

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை